# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்


ஆசிரியர்: ஆ.செல்வம்

ஏப்ரல் - 2020

தனிப்பிரதி 10.00








சமூக விலகலை கடைபிடிப்போம்!


தனித்திருப்போம்!


கைகளை
அடிக்கடி கழுவுவோம்!


கைகளை அடிக்கடி
சானிடைஸ் செய்வோம்!


நாங்கள்
கொரோனாவை
அழிக்கும்
பணியில்
இருக்கிறோம்
நீங்கள்
எமக்காக
வீட்டில்
இருங்கள்!
கொரோனா தொற்றை ஒழிக்க பணி செய்யும் அனைவருக்கும் நாம் நன்றி கூறுவோம்!

# அரசு ஊழியர்

ஏப்ரல் 2020

மலர் : 41 இதழ் : 4

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,

இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*

*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*

*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,*

*சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்


### கொரோனாவை வெல்வோம்!

அணுவை விடவும் சிறியது
அணுகுண்டைபோல் கொடியது!
சத்தமில்லாமல் நுழைவது
யுத்தமில்லாமல் அழிப்பது!

தொடுதல் வேண்டாம்
தனிமை கொள்வோம்!
தூய்மை என்பதை
மதமாய் செய்வோம்!

கொஞ்சம் அச்சம்
நிறைய அறிவு
இரண்டும் கொள்வோம்!
இதையும் வெல்வோம்!!

– கவிஞர் வைரமுத்து



தலைவர் மடல்

# கொரோனா கற்றுத்தரும் பாடங்கள்!

கலவரப்பட்டு கதிகலங்கி நிற்கும் கண்களின் மேலே ஒரு குறும்பு தோன்றி மறைகிறது. உறைந்து போன உதடுகளுக்குள்ளே மெல்லிய புன்னகை வந்து போகிறது. மருண்டுபோன மனதிற்குள்ளே எகத்தாள இசை அவ்வப்போது கேட்கிறது. இன்று உலகையே தலைகீழாக புரட்டிப் போட்டிருக்கும் கொரோனா என்ற கண்ணுக்குத் தெரியாத வைரஸ் ஒரு பக்கம் கொடூர பயங்களை விதைத்திருந்தாலும் அதன் மறுபுறத்தை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் மேற்சொன்ன குறும்புகளும், புன்னகையும், எகத்தாளமும் ஏன் வந்தன என்பதற்கு விடை கிடைத்து விடும்.

யார் பெரியவன்? நான் பெரியவனா? நீ பெரியவனா? என்று மல்லுகட்டி நின்ற வல்லரசுகள் இன்று கண்ணுக்குப் புலப்படாத வைரஸைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றன. மக்களின் ஆரோக்கியத்திற்காக செலவிட மறுத்து அணுஆயுதங்களை வாங்கிக் குவித்த பேரரசுகள் இன்று மருத்தவ மனைகளில் வந்துகுவியும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவக் கருவிகள் இல்லாமல் விழிபிதுங்கி நிற்கின்றன. செவ்வாய் கிரகத்தில் குடியேறப் போகிறோம் என்று கூவிய மனித இனம் இன்று பூமியில் வாழ வழியின்றி குறுகி நிற்கிறது. நாட்டையும், நாட்டின் தலைவர்களையம் பாதுகாக்க குண்டு துளைக்காத வாகனங்களை உற்பத்தி செய்த மனித ஆற்றல் ஒரு தொற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க முடியாமல் கொத்து கொத்தாய் செத்து வீழ்கிறது.

இந்த உலகைப் படைத்ததாகவும், மக்களை காப்பதாகவும் நம்பப்பட்ட கடவுள்கள் எல்லாம் தங்கள் இருப்பிடத்தை நன்றாக பூட்டிக்கொண்டு கோவில், தேவாலயம், மசூதிகளுக்குள்ளேயே பாதுகாப்பாக அடைபட்டு விட்டனர். என்மதமே பெரிது என்று எதிரெதிர் நின்று தர்க்கம் பேசிய எந்த மதத்தினரையும் சாதியினரையும் விட்டுவைக்கவில்லை கொரோனா வைரஸ். ஆன்மிகம் தான் மனிதனை வாழ்விக்கிறது, அறிவியல் கெடுக்கிறது என்று ஆருடம் சொன்ன ஆன்மிக வழிகாட்டிகள் எல்லோருடைய முகத்தினையும் இன்று என்-95 முகக் கவசம் மூடியிருக்கிறது. அசாத்தியமான சக்தி வாய்ந்த சமஸ்கிருதம், அரபி, ஹீப்ரூ மொழிகளுக்கு கடவுளே செவிசாய்ப்பார் என்று பிரசங்கம் செய்தவர்கள் எல்லாம் கொரோனா என்ற ஒற்றை ஆங்கிலச் சொல்லுக்கு பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர். என் மதம், என் கடவுள், என் மக்கள் என வீர வசனம் பேசியவர்கள்

எல்லாம் இன்று வீதிகளில் காணவில்லை. மக்கள் சேவையே மகேசன் சேவை அதுவே என் லட்சியம் என்று மேடைதோறும் பேசி பதவி சுகம் அனுபவித்தவர்கள் பலர் தங்களைத் தாங்களே இருட்டடிப்பு செய்து கொண்டுவிட்டனர். 2020ஆம் ஆண்டு ஆஹா ஓஹோன்னு இருக்கும் என்று பஞ்சாங்கம் பார்த்து குறி சொன்ன புரோகிதமும், 12 ராசிக்கும் கட்டம் போட்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இரட்டிப்பாகும் என கதையளந்த சோதிடமும் இப்போது எந்தக்கட்டத்திற்குள் ஒளிந்து கொண்டுள்ளன என தேடும் நிலைதான் ஏற்பட்டுள்ளது. பாலபிஷேகம் முதல் கட்அவுட் வரை வானளவு உயர்ந்த சூப்பர் ஹீரோக்களும், பஞ்ச் டயலாக் பேசியே பஞ்சத்தை ஓட்டிவிடுவேன் என்று வளர்ந்த நாயகர்களும் களத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை காணவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி சீனாவின் மேல் கடுங்கோபத்தில் இருந்தாலும் வேறு வழியின்றி உதவி கேட்கிறார். இந்தியப் பிரதமர் நாட்டுமக்களைப்பார்த்து கையெடுத்துக் கும்பிடுகிறார். கனடா நாட்டு பிரதமரின் மனைவி படுக்கையில் இருந்தவாறே கண்ணீர்மல்க பேட்டியளிக்கிறார். பிரான்ஸ் ஜனாதிபதிக்கு கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு விட்டதற்காக அதிர்ச்சி அடைகிறார். இங்கிலாந்து இளவரசர் கரோனோ தொற்றுநோய்க்கு ஆட்பட்டு தனிமையில் கிடக்கிறார். இத்தாலி பிரதமர் இறந்தவர்களை அடக்கம் செய்யக்கூட எங்களிடத்தில் ஆட்கள் இல்லை என்று பொது இடத்தில் கதறுகிறார். உலகை ஆளும் இத்தனை பெரிய ஜாம்பவான்களையே கதற வைத்துள்ள இந்தக் கொடிய கொரோனா வைரஸை எதிர்த்து உண்மையில் இன்று களத்தில் நிற்பவர்கள் யார்?

நாடே பஞ்சத்தில் இருக்கும் போது கொஞ்சம்கூட நெஞ்சில் ஈரமின்றி ஊதிய ஊயர்வுக்காக போராடு கிறார்கள் என்று அமைச்சர்களால், சில சமூக வலைத்தள வாய்ப்பேச்சு வீரர்களால் கொச்சைப்படுத்தப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டும், பிற மாவட்டங்களுக்க மாறுதல் செய்யப்பட்டும் பழிவாங்கப்பட்ட மருத்துவர் களும், அடிப்படை ஊழியர்களின் சம்பளத்தைவிட குறைவான அடிமாட்டுச் சம்பளத்திற்கு எடுக்கப்பட்டு, எட்டாயிரம் ரூபாய் சம்பளம் போதாது என போராடிய தற்காக அரசின் இரும்புக் கரங்களால் நசுக்கப்பட்ட செவிலியர்களும், எப்போதும் சக மனிதனால் கூட மதிக்கப்படாமல், சமூகத்தால் ஒதுக்கப்பட்டும், கேவலப்படுத்தப்பட்டும் வரும் துப்புரவுப் பணியாளர் களும் மருத்துவத்துறை அடிப்படை பணியாளர் களும்தான் இன்று களத்தில் இருக்கிறார்கள்.

இவர்களோடு ஊரடங்கு உத்தரவை, 144 தடையை அதன் உள்ளார்ந்த அர்த்தத்தோடு நிறைவேற்ற சாலைகளில் நின்று சமூகப் பரவலை தடுக்கும் சேவை யில் ஈடுபட்டுள்ள காவல்துறையினரும். தனிமைப்படுத் தப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கும், தினசரி வேலைவாய்ப்பினை இழந்து வாழ்வாதாரமின்றி தவிக்கும் கூலித் தொழிலாளர்கள், சாலையோர மக்கள் போன்றோருக்கு உணவு சமைத்து விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அங்கன்வாடி, சத்துணவு மற்றும் வருவாய்த் துறை, சமூகநலத்துறை, மருத்துவ தொழில்நுட்பப் பிரிவு ஊழியர்களும், கொரோனா வைரஸின் வீரியத்தை அறிந்திருந்த போதிலும், உயிரை பணயம் வைத்து செய்து வரும் மக்கள் சேவை மகத்தானது போற்றத்தக்கது. அரசு மருத்துவர்களும், செவிலியர்களும், அடிப்படை ஊழியர்களும் வாங்கும் சம்பளம் போதாதா என்று வாய்க்கு வந்தபடி பேசியவர்கள் இப்போது கூற வேண்டும் உயிரைப் பணயம் வைத்து சேவை செய்யும் இவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தால் தகும் என்று. அது அவர்கள் உயிருக்கு ஈடாகுமா என்பதையும் இவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தக் கொரோனா நமக்கு சில படிப்பினைகளை சொல்லிக் கொடுத்திருக்கிறது. நம்முடைய பாட்டன் களும் பூட்டன்களும் அந்தக்காலத்தில் வெளியே போய்வந்தால் வாசலிலே கால் கை முகம் கழுவி விட்டுத் தான் வீட்டுக்குள் வரும் பழக்கத்தை வைத்திருந்தார்கள் காரணம் நோய்க்கிருமிகள். காலணிகளை வீட்டு வாசலில் விட்டார்கள், கழிப்பறை குளியலறைகளை வீட்டிற்கு வெளியே வைத்தார்கள் காரணம் நோய்க்கிருமிகள். வாசலிலே மாட்டுச்சாணம் கரைத்துத் தெளித்தார்கள் பெண்கள் மஞ்சள் பூசிக் குளித்தார்கள், காரணம் நோய்க்கிருமிகள். காலையிலே நீராகாரம் பருகினார்கள், கேப்பங்கூழ் குடித்தார்கள் அல்லது பழைய சாதம் உண்டார்கள் காரணம் நோய் எதிர்ப்பு சக்தி.

கிராமத்தான், நாட்டுப்புறத்தான், காட்டுவாசி என்று நாம் சொல்கிறோமே, அவர்கள் நாம் பெருமை பேசும் நாகரீகத்தைவிட, இயற்கை வழங்கும் கொடையைப்பற்றி அதிகமாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். தங்கள் உடல் நலம் கெடாமலிருக்க இயற்கையை பயன்படுத்திக் கொண்டனர். நாகரீக வளர்ச்சியில் எவ்வளோ விஞ்ஞான முன்னேற்றத்தைக் நாம் கண்டுள்ள போதிலும் நோய்கள் மேலும் மேலும் சிக்கலானதாகவும், என்னவென்று கண்டுபிடிக்க முடியாமலும் வந்துகொண்டேயிருக் கின்றன. ஒவ்வோர் ஆண்டும் மருந்துகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. ஆனால் அதற்கேற்ப மக்களின் துன்பம் குறைந்தபாடில்லை. ஏராளமான மருந்துகளை உடலுக்குள் திணித்து உடலை வருத்திக் கொள்வதைத்தவிர வேறுவழியில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டதாகவே தோன்றுகிறது. நாம் அனைவரும் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் முன்னோர்கள் கடைபிடித்த ஒழுக்கத்தையும் பின்பற்ற யு டான் எடுத்தால் கனவு கண்டபடி வாழ்வையும் மனம் விரும்பியபடி மரணத்தையும் நிச்சயம் அமைத்துக் கொள்ளலாம். இந்த கொரோனா நமக்கு கற்றுத் தந்துள்ள பாடங்களை சுத்தம், சுகாதாரம், ஆரோக்கியம் என விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால் அதற்கு இந்த மனித இனம் கொடுத்துள்ள விலை... விலை மதிப்பற்ற உயிர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இனியாவது விழித்துக்கொள்வோம். ❖

# அதிகாரத்தில் இருப்போர் ஆற்ற மறந்த கடமைகளை நினைவுகூர்வோம்!

“அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராக
மனிதன் நடத்தும் போராட்டம்
மனிதனின் மறதிக்கு எதிராக
நினைவுத்திறன் நடத்தும் போராட்டமாகும்”

ஆம் இன்று தமிழகத்தில், இந்தியாவில், உலகில் எண்ணற்ற போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவை இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு என்ற கோரிக்கைகளுக்காக மட்டுமல்லாது தன்னுடைய சுய கௌரவத்தையும் தன்மானத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக வும் இன்னும் பிற உரிமைகளுக்காகவும் உலகம் முழுவதும் உழைப்பாளி மக்கள் போராடி வருகின்றனர். இப்போராட்டங்களை ஜனநாயக அரசுகள் அணுகும் விதம் மிகக் கொடூரமானதாக உள்ளது. மன்னர் ஆட்சி அணுகுமுறை பற்றி சொல்லவே வேண்டியதில்லை.

அரசு எந்திரம் என்பது... சட்டத்தை அமல்படுத்த வேண்டிய அரசமைப்புச் சட்டத்தின் படியான காவல்காரன் ஆகும். ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே அதிகாரத்திற்கு வந்த உடனேயே அனைத்தையும் மறந்து விடுகிறார்கள் அல்லது தங்களது கடமைகளை உணர மறுக்கிறார்கள். அவர்களை தங்களின் வாக்குரிமையைப் பயன்படுத்தி ஆட்சி பொறுப் புக்கு தேர்வு செய்த மக்களும் தவறுகளை சுட்டி கேட்க மறந்து போய் நிற்கின்றனர். இதில் அரசு ஊழியர்கள் விதிவிலக்கல்ல. ஆள்வோரின் பரபரப்பான அறிவிப்புகளில் மயங்கி உண்மை களை மறந்த நிலையில் இருக்கின்ற ஊழியர்கள் மத்தியில், மத்திய, மாநில ஆட்சியாளர்களின் தவறான நடவடிக்கைகளால் உழைப்பாளி மக்களாகிய நாம் சந்தித்து வரும் பிரச்சனைகளை யும் உண்மைநிலையினையும் எடுத்துச் சொல்ல வேண்டியது இன்று நம் முதற்பெரும் கடமையாக மாறியுள்ளது

### தமிழகத்தில் மருத்துவ சிகிச்சைக்கு மக்கள் படும்பாடு

தமிழக அரசு வாணவேடிக்கைகளால் மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை நாள்தோறும் அறிவித்து வருகிறது. அவற்றின் அமுலாக்கம் குறித்து அது கவலைப்படுவதில்லை. அரசின் அறிவிப்பின் பின்னால் உள்ள அவலங்கள் மக்களுக்குத் தெரிவதில்லை. மத்திய அரசின் கொள்கைகளை தமிழக அரசும் அப்படியே அமலாக்கி வருகிறது. தனியார்மயக் கொள்கைகளால் அரசு ஊழியர்களும் பொதுமக்களும் ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகின்றனர்.

### ஆய்வகங்கள் தனியார் வசம்

ஏற்கனவே தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தில் மருத்துவத் துறையில் நிரந்தர பணியாளர்களை குறைத்து தனியார் மூலம் சேவை வழங்கும் திட்டத்தை தமிழக அரசு கடந்த 2013ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. தற்போது பல்நோக்கு மருத்துவ பணியாளர்களை நியமிக்க (Multi Purpose Hospital Worker) பத்மாவதி என்ற தனியார் நிறுவனம் ஒப்பந்தம் எடுத்துள்ளது. இது ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரை ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவில்லை. அதனால் ராமநாதபுரம், விருதுநகர், திருப்பூர், புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் இன்னும் பல மாவட்ட தலைமை மருத்துவமனைகளை ஒப்பந்த அடிப்படையில் ‘ஹைடெக் லெபாரட்டீஸ்’ என்ற தனியார் நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்படைத்தது. இதனை எதிர்த்து அன்றே நாம் போராட்டம் நடத்தினோம். ஆனாலும் தமிழக அரசு அம்முடிவில் இருந்து பின் வாங்கவில்லை. (இன்று கரோனா வைரஸ் கண்டறிய தனியார் வசம் ரூ. 4500 கட்டி ஏழை எளிய மக்கள் பரிசோதனைக்கு உட்படுத்த முடியுமா? அதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதா? தமிழகம் முழுவதும் 11 ரத்தப் பரிசோதனை மையங்களை அரசு உருவாக்கியுள்ளதாக பத்திரிகைச் செய்தி. நோய் உள்ளதா என்று பதற்றத்தோடு அரசு மருத்துவமனையில் மக்கள் குவிகிறார்கள். அதற்கு அரசு போதுமான பரிசோதனை திட்டம் உள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மேசையிலிருந்து...

தமிழக அரசுக்கு ஞாபகப்படுத்துகிறோம். மருத்துவத்துறை இத்திட்டத்தை அமல்படுத்த ஒரு மருத்துவமனைக்கு மாதத்திற்கு ரூ. 2.5 லட்சம் வீதம் ஆண்டுக்கு ரூ. 30 லட்சம் என தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்தது. இத்திட்டம் துவங்கிய சில மாதங்களிலேயே அந்நிறுவனம் அரசு செய்த ஒதுக்கீடு நிதி போதவில்லை என கூறி நாள் ஒன்றுக்கு ரூ.8000க்குள் மட்டுமே பரிசோதனை மேற்கொண்டது. அதற்கு மேல் வரும் நோயாளிகளை திருப்பி அனுப்பி மறுநாள் வரும்படி அலைகழித்தது. மேலும் சிறப்பு பரிசோதனைகளை நிறுத்தியது. இம்மருத்துவ மனைகளில் தற்போது சர்க்கரை, உப்பு, ரத்த அளவு, ரத்த அணுக்கள் ஆகிய பரிசோதனைகள் மற்றும் செய்யப்படுகின்றன. அதனால் பெரும் பாலான நோயாளிகள் முக்கிய நோய்கள் கண்டறியப்படாமலேயே சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

அரசு ஆய்வக நுட்புனர்கள் பணியாற்றிய போது ஒவ்வொரு மருத்துவமனையிலும் மாதத்திற்கு ரூ.25,000 முதல் ரூ.30,000 வரை பரிசோதனைகள் செய்யப்பட்டன. அது தற்போது குறைந்துள்ளது. தனியார் நிறுவனம் தொடர்ந்து பணியை மேற்கொண்டு வருகிறது. மொத்தத்தில் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகள் சரியான சிகிச்சை கிடைக்காமல் அவதிப்பட்டு வருகிறார்கள் என்பதே உண்மையாகும்.

ஒரு காலத்தில் அரசு மருத்துவமனையை தர்ம ஆஸ்பத்திரி என்று அழைத்த காலம் போய் இன்று பணம் பெற்றுக்கொண்டு எக்ஸ்ரே, மாஸ்டர் செக்கப், ஈசிஜி என ஒவ்வொரு சிகிச்சைக்கும் ஒரு தொகை என்று அரசு மருத்துவமனைகளும் வசூல் துவக்கியுள்ளது. மருத்துவம், கல்வி அரசு அடிப்படையாக, இலவசமாக வழங்க வேண்டும் என்ற நிலை மாறி பணம் உள்ளவர்கள் மட்டும்தான் மருத்துவம் கல்வி பெற முடியும் என்ற நிலை உள்ளது

கடந்த செப்டம்பர் 2019 அரசு மருத்துவர்கள் காலிப் பணியிடம் பூர்த்தி செய்ய பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்தார்கள். அரசு குறைந்தபட்சம் அழைத்து பேசாமல் அவர்களின் மீது 17பி குற்றக் குறிப்பாணைகளும், மாவட்டம் விட்டு மாவட்டம் மருத்துவர்களை மாறுதல் செய்தது. அதன் விளைவாகத்தான் அரசு மருத்துவ சங்கத் தலைவர் திரு.லட்சுமி நரசிம்மன் மாறுதல் செய்யப்பட்டு மன உளைச்சல் காரணமாக மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு இறந்து விட்டார். தற்போது கொரானா வைரசால் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர், பணியிலிருந்து ஓய்வு பெற்ற மருத்துவர்கள் பணிக்கு வாருங்கள், 500 மருத்துவர்கள், 1500 ஆய்வக நுட்பனர்கள், செவிலியர்கள் 1000 பணியிடம் புதிதாக நிரப்பப் படும் என்கிறார். இன்னும் மருந்தாளுநர்கள் காலியிடம் 700 உள்ளது. அதைத் தொடர்ந்து மருத்துவத் துறையில் பல்வேறு தொழில்நுட்ப பணியாளர்கள் காலியிடம் பூர்த்தி செய்யப் படாமல் உள்ளது. அதை போர்க்கால அடிப் படையில் நிரப்பப்பட வேண்டும். ஒட்டு மொத்தமாக தமிழகத்தில் பல்வேறு துறைகளில் நாலரை லட்சம் பணியிடம் பூர்த்தி செய்திட வேண்டும். இவ்வாறான அசாதாரணமான உலகத்தை அச்சுறுத்துகின்ற கொடிய நோயான கொரோனா வைரஸ், புயல், வெள்ளம் பாதிக்கப்படுகின்றபோது களத்தில் உயிரைக்கூட துச்சமென நினைத்து அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றக்கூடியவர்கள் அரசு ஊழியர்கள் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கொடிய தொற்று நோய் வைரசால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வருவாய்த் துறை, சமூகநலத்துறை, தீயணைப்புத்துறை, மருத்துவ துறை, காவல் துறை, சுகாதாரத் துறை, வளர்ச்சித் துறை, மாநகராட்சி நகராட்சி பேரூராட்சி, மின்சாரம், கூட்டுறவுத் துறை இன்னும் பல்வேறு துறை ஊழியர்கள் நேரம் காலம் பாராமல் மக்களுக்கான சேவையை செய்து கொண்டு இருக்கிறார்கள். பத்திரிகையில் வெளி வருகிறது கடவுள் கோயில்கள் இல்லை. கடவுள்கள் மருத்துவமனைகளில் வெள்ளை உடை தரித்து பணிபுரிந்து கொண்டு இருக் கிறார்கள் என்று பாராட்டுகிறது. இதையும் ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டு தனியார்மயத்தை நோக்கிச் செல்கின்ற பாதையை விட்டு விலகி மக்கள் நலன் சார்ந்த அரசாக மாற வேண்டும்

### காப்பீட்டுத் திட்டங்கள்

தமிழக அரசு மருத்துவமனைகளில் மேற் கொள்ளப்பட்டு வரும் இலவச சிகிச்சைகளில் மட்டும் தான் இந்த நிலை என்றால் அது உண்மை அல்ல. தமிழக அரசால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறுவதிலும் ஏராளமான பிரச்சனைகள் இருந்து வருகின்றன. பொதுமக்களும், அரசு ஊழியர்களும் இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை

பெறுவதில் சொல்லொணா துயரங்களை சந்தித்து வருகின்றனர். இந்த திட்டத்தில் சிகிச்சை பெற்றவர்களில் ஒருவர் கூட அதற்கான செலவுத் தொகையை முழுமையாக பெற முடியவில்லை. இந்நிலையில் தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பல்வேறு புள்ளி விபரங்களைச் சொல்லி பெருமைபட்டுள்ளார். மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கு திமுக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தொகையில் ஸ்டார் ஹெல்த் காப்பீட்டு நிறுவனம் ரூ. 296 கோடி லாபம் ஈட்டி உள்ளதாகவும், அதிமுக ஆட்சியில் காப்பீட்டு திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனைகள் மட்டுமே ரூ.1148 கோடி லாபம் ஈட்டி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உண்மை என்ன? இப்போதும் காப்பீட்டு திட்டத்தின்கீழ் பயனடைந்து இருப்பது யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முகவராக உள்ள தனியார் நிறுவனமே.

எனவேதான் இத்தகைய மருத்துவ சிகிச்சை திட்டங்களை அண்டை மாநிலங்களைப் போல் அரசே மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோரி வருகிறது. ஆனால் அதற்கு காப்பீட்டு விதிகளில் இடமில்லை என கூறி வருகிறது. ஆளும் அரசு தன் மக்களுக்கான மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதற்கான ஏற்பாடு செய்யவோ அல்லது அதற்கென்று மாநில அரசே ஒரு காப்பீட்டு நிறுவனத்தை உருவாக்கி கொள்வதை தடுக்க எவருக்கும் உரிமை இல்லை. இன்னும் சொல்லப் போனால் குடி மக்களுக்கான கல்வி, மருத்துவம், பொது சுகாதாரம் போன்றவற்றை இலவசமாக ஏற்பாடு செய்து தர வேண்டியது ஆளும் அரசின் அடிப்படை கடமையென இந்திய அரசியலமைப்பு சட்டம் மிகத் தெளிவாக வரையறுத்துள்ளது என்பதே உண்மையாகும். ஆனால் உண்மைக்கு புறம்பான காரணங்களை சொல்லி ஆட்சியாளர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற மறுத்து வருகிறார்கள். இந்த உண்மைகளை நாம் உணர்வதோடு மக்களுக்கு உணர்த்தி இதற்கு எதிராக களம் இறங்க வேண்டியுள்ளது.

### இந்தியாவில் கரோனா வைரசால் தாக்கம்

நாடு தழுவிய அளவில் 21 நாட்களுக்கு முழுமையான ஊரடங்கு இருக்கும் என்று மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள் 24 மார்ச் அன்று அறிவித்தார். அந்த அறிவிப்பு கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு இது தேசிய அளவிலான மிக முக்கியமான அறிவிப்பு வெளியாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக உலக அளவில் இரண்டாவது மக்கள் தொகை கொண்ட நாடு இந்தியா இந்நோயில் இருந்து சற்று விலகி நிற்பதாக காணப்பட்டது. ஆனால் அந்த அறிவிப்புக்குப் பின்னர் ஊரடங்கு உத்தரவு தொடங்கியவுடன் நோய்த்தொற்று உறுதிப்படுத் தப்பட்ட நோய்களின் எண்ணிக்கை மார்ச் 28க்குள் அந்த எண்ணிக்கை 933ஆக உயர்ந்தது.

பிரதமர் மோடி அவர்கள் அதற்கு முன்பாக தொலைக்காட்சியில் மார்ச் 22 ஒரு ஊரடங்கு உத்தரவு என்றும், அதற்கு 15,000 கோடி ஒதுக்கு வதாகவும், எல்லோரும் சமூகவிலகல் கடைப் பிடிக்கவும், அன்று மாலை வீடுகளின் மொட்டை மாடியிலிருந்து கை தட்டுமாறும் வலியுறுத்திப் பேசினார். மறுநாள் பத்திரிகையில் வந்த செய்தி அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. பிரதமரின் அறிவிப்பு 130 கோடி பேர் கொண்ட இந்திய மக்களை இந்த தொற்று நோயிலிருந்து பாதுகாத்திட 15,000 கோடி அறிவித்தார். அப்படி என்றால் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் ரூ. 111 கொடுத்தால் இந்த நோயிலிருந்து பாதுகாத்திட முடியுமா? பிரதமர் அறிவித்த நோய்த்தடுப்பு நிவாரண நிதி போது மானது அல்ல. இது மக்களை பாதுகாக்காது என்று இடதுசாரி கட்சிகள் அறிக்கை விட்ட பிறகுதான் மத்திய நிதியமைச்சர் ரூ.1.70 லட்சம் கோடி அறிவித்தார். (உதாரணம்- கேரள அரசு தனது மக்களுக்கு அனைத்து உதவிகளை செய்தும் 20,000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது)

மத்திய அரசு எடுத்த நடவடிக்கை மிகவும் தாமதமாக எடுக்கப்பட்டதாகவும், நாட்டிலுள்ள அனைத்து ஏழைகள், வீடற்றவர்களும் அதனால் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்தது. கோவிட்-19 தொற்று நோய் மார்ச் 11ல் இருந்து பரவுவதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ள போதிலும் சுகாதார அவசர நிலை நிலவுவதாக அறிவிக்க இந்தியா மறுத்து விட்டது. அதனால் மக்கள் வழக்கம் போல் இயங்கி வந்தார்கள். இப்போது நாள் முழுவதும் 30 ஆயிரத்துக்கும் குறைவான மக்களே பரிசோதிக்கப்பட்டனர். உலக அளவில் இது குறைவான அளவே.

அமெரிக்காவை தளமாக கொண்ட நோய் இயக்கவியல் பொருளாதாரம் மற்றும் கொள்கைக் கான இயக்குனர் ரமணன் லட்சுமி நாராயணன், இந்தியாவில் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட போதிலும் ஏப்ரல் பிற்பகுதி அல்லது மே மாத தொடக்கத்தில் இந்த தொற்று நோயின் உச்சநிலை இந்தியாவில் ஏற்படும். அந்த நேரத்தில் பத்து

லட்சத்துக்கும் அதிகமாக படுக்கைகளும், மருத்துவ சேவை தேவைப்படும். இந்தியாவில் 1000 பேருக்கு வெறுமனே 0.5 மருத்துவமனை படுக்கை மட்டும் உள்ளது. (இத்தாலியில் ஆறு மடங்கு படுக்கைகள் உள்ளன)

இந்தியாவில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதம் மட்டுமே இந்திய சுகாதாரத்தில் ஒதுக்கீடு செய்கிறது. அமெரிக்கா உள்நாட்டு உற்பத்தியில் 17 சதவீதத்தைத சுகாதாரத்திற்காக ஒதுக்கீடு செய்கிறது. (தற்போது கொரோனா வைரசால் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் முதலிடம் அமெரிக்கா)

இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம் உத்திரபிரதேசம். கடந்த சில ஆண்டுக்கு முன் அந்த மாநிலத்தில் மூளைக்காய்ச்சலில் நூற்றுக்கணக்கான பேர் இறந்தபோதிலும் மருத்துவமனைகளில் ஆக்சிஸன் இல்லை. ஆனால் கடந்த ஆண்டு ராமர் சிலை அமைப்ப தற்கு ரூ.450 கோடி ஒதுக்கீடு செய்தது உத்தரப் பிரதேச அரசு.

பிரதமர் மோடி அவர்கள் மார்ச் 24 அன்று ஊரடங்கை அறிவித்தபோது அன்றாடம் தேவைப்படும் பொருட்கள் எவ்வாறு வாங்குவார்கள் என்பது பற்றி மோடி தன்னுடைய உரையை முடிப்பதற்குள் மக்கள் மருந்தகங்களில் பதட்டமான முகங்களுடன் திரண்டனர். அதனால் மக்கள் சமூக விலகல் கடைபிடிக்கவில்லை. பதட்டமடைந்த குடும்பங்கள், மளிகை கடைகளில் மக்கள் அத்தியாவசிய பொருட்களை வாங்கி தங்கள் சக்திக்கேற்ப சேமித்து வைத்துக் கொண்டார்கள். சிறிய எண்ணிக்கையில் உள்ள செல்வந்தர்கள் வாரக்கணக்கில் பொருட்களை வாங்கி குளிர் சாதனப் பெட்டிகளில் சேமித்து வைத்துக்கொண்டார்கள்.

அதேவேளையில் இந்தியாவில் 45 கோடி மக்கள் நாட்டின் அன்றாட கூலி தொழிலாளர்கள் 21 நாட்கள் தனது உணவுத் தேவை குடும்பத்தை எவ்வாறு பூர்த்தி செய்வார்கள் என்பதை மத்திய அரசு சிந்திக்கவில்லையா? ஒரு சில அறிவிப்புகள் செய்தாலும் முழுமையடையுமா கேள்விக்குறி. அதேபோல் திடீரென இந்த அறிவிப்பால் கூலித் தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு நடந்தே சென்று கொண்டிருந்தனர் 900 கிலோ மீட்டர் வரை. அதில் சிலர் தங்கள் குழந்தைகளை முதுகில் கட்டிக்கொண்டு நடந்து சென்றார்கள். இது ஊரடங்கு உத்தரவை மீறியதற்காக காவல்துறையினர் இறக்கமின்றி அவர்களை அடித்தது நடந்தேறியது.

இந்த ஊரடங்கு உத்தரவினால் பீகாரின் ஷாகர்தோலா கிராமத்தை சேர்ந்த ஒரு சிறுவன் பட்டினியால் இறந்ததாக செய்திகள் வெளியாகி யிருக்கின்றன. தினக் கூலி தொழிலாளியான அந்த சிறுவனின் தந்தை வேலையின்றி வீட்டில் முடங்கியதே சிறுவனின் மரணத்திற்கு காரணமாக கூறப்படுகிறது. சிறுவன் உடல்நிலை சரியில் லாமல் இறந்ததாக அரசு கூறியுள்ளது. குடும்பத்தின் பட்டினிச்சூழல் சிறுவனின் மரணத்தை விரைவுபடுத்தியது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட லட்சக் கணக்கான ஏழைகளுக்கு உணவளிப்பது இப்போது நம்முன் உள்ள பெரும் சவால்.

உலகின் பட்டினிக் குறியீட்டு அறிக்கையின் படி உலக நாடுகளில் 102வது இடத்தில் உள்ள இந்தியாவில் வறுமைக்கோட்டுக்கு கீழ் 36.3% உள்ளனர். ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்ட நிலையில் முன்பு இருந்த எண்ணிக்கையை காட்டிலும் பல கோடி பேர் இரவில் வெறும் வயிற்றோடு உறங்கச் செல்கிறார்கள். சாலை யோரங்களிலும் பொது இடங்களிலும் தங்கி வாழ்வோர் மட்டுமல்லாது தங்களுக்கென்று ஒரு வீடு இருப்பவர்களும் கூட உணவுக்காக அல்லல்படும் நிலையை இன்றைய சூழல் உருவாக்கியிருக்கிறது. அரசு அறிவித்திருக்கும் நிதியுதவிகளும் பொது வினியோக திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களும் மட்டுமே அவர்களின் பட்டினியை தீர்த்து விடாது.

கேரளம், கோவா இரு மாநிலங்களிலும் அங்கே தன்னார்வலர்களை நிவாரணப் பணிகளில் அனுமதிக்கின்றனர். இதற்கு முன்பு இயற்கை பேரிடர் காலங்களில் பணியாற்றிய குழுக்களை தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மருத்துவர்களின் கதி**

மும்பை நகரத்தில் இரண்டு கோடி மக்கள் தொகை கொண்ட நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் 400 வென்டிலேட்டர்கள் தீவிர சிகிச்சைக்காக ஆயிரம் படுக்கைகள் மட்டும் இருக்கின்றன. கொரோனா வைரஸ் பாதிக்கப் பட்ட நோயாளிகளில் பெரும்பாலானோர் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். வளர்ந்த நகர் மும்பையில் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களை பக்கத்து வீட்டுக்காரர்களை தூர விலக்கி வைப்பதாக தகவல். இங்கே உயிர்களைக்

காப்பாற்றிக் கொண்டு இருக்கிறோம். மருத்துவமனை வளாகத்திற்கு வெளியே தீண்டத்தகாதவர்களைப் போல் நடத்தப்படுவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

### இந்தியாவில் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளதா?

கரோனா தாக்குதலின் பிரதான இலக்கு சுவாச மண்டலம்தான். தொற்றுக்கு ஆளான மூன்று பேரில் ஒருவர் சுவாசப் பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள். மூளையால் சுவாசத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் வென்டி லேட்டரில் அளிக்கப்படும் கெரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் வென்டிலேட்டர்கள் பங்கு தவிர்க்க முடியாதது. உலகம் முழுவதும் ஒவ்வொரு நாடும் வென்டிலேட்டர், படுக்கைகளைத் தயாரித்தும் வாங்கி குவித்தும் வருகின்றன.

கரோனா வைரசால் தாக்கப்பட்டு சுவாசப் பிரச்சனை எதிர்கொள்ள ஒருவருக்கு 21 நாட்கள் வென்டிலேட்டர் உதவியோடு சிகிச்சை அளிக்க வேண்டி இருக்கும். இந்த வென்டிலேட்டர்கள் கிடைத்தால் பலர் உயிர் தப்புவார்கள்.

இந்தியாவில் வைரஸ் தாக்குதல் கடுமையாக இருக்கும் பட்சத்தில் கண்டிப்பாக 40 லட்சம் வென்டிலேட்டர்கள் படுக்கைகள் தேவைப்படும் என்று மருத்துவர்கள் கணிக்கிறார்கள். ஆனால் தற்போது இருக்கும் வென்டிலேட்டர்கள் 40,000. அதுவும் அரசு மருத்துவமனைகளில் இருப்பவை 8432 மட்டுமே (இந்தியா முழுமைக்கும்). ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் மத்திய அரசு சுகாதாரத் துறையின் மீது காட்டி இருக்கும் அக்கறை இவ்வளவுதான். கேரளம் போன்ற மாநிலங்கள் கொஞ்சம் அக்கறையோடு நாட்டி லேயே அதிகபட்சமாக வாங்கி வைத்திருக்கிறது. அங்கும் கூட 5000, மும்பையில் 800, தமிழ்நாட்டில் 1,500 என்கிறார்கள்.

இந்தியாவில் பயன்படுத்தப்படும் வென்டி லேட்டர்கள் 75% வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. இந்தியாவில் தயாரிக்கப்படும் வென்டிலேட்டர்களுக்கு ரூ. 7 லட்சம். வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்படுபவதற்கு ரூ. 11 முதல் 18 லட்சம். இனி இறக்குமதிக்கான வாய்ப்புகள் குறைவு. இந்தியாவிலேயே தயாரிப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டதாக தகவல். இந்தியாவில் கடந்த மாதம் தயாரிக்கப் பட்ட மொத்த வென்டிலேட்டர்கள் எண்ணிக்கை ஏறக்குறைய 2700 மட்டுமே. இந்தியாவின் மொத்த உற்பத்தி திறன் என்று பார்த்தாலும் கூட மாதம் ஒன்றுக்கு 5,000 மட்டுமே. இதற்கான உதிரிபாகங்கள் சீனா, ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்கிறார்கள். விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு இருக்கும் நிலையில் அதுவும் எந்த அளவுக்கு சாத்தியம் என்று தெரியவில்லை.

இதற்கிடையில் சுகாதாரத்துறை அமைச்சகம், பொதுத்துறை நிறுவனங்களிடம் 10,000 வென்டி லேட்டர்கள் தயாரிக்கவும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடம் 30,000 வென்டிலேட்டர்க்ளைத் தயாரிக்கவும் கேட்டுக்கொண்டுள்ளது. இன்றும் எய்ம்ஸ் மருத்துவமனை, ஒருசில தனியார் நிறுவனங்களும் அவசரத்தேவைகளை சமாளிப் பதற்கு தயாரிப்புப் பணியில் ஈடுபடப்போவதாக பேசப்படுகின்றது. இது எல்லாமே யானைப் பசிக்கு சோளப் பொறிதான் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

மும்பையில் தடியடி நடத்திய காவல் துறையினரின் பரிசோதனையிலிருந்து தப்பி தங்களுடைய வீடுகளில் பாதுகாப்பாக செல்ல முடியும் என்ற எண்ணத்துடன் கண்டெய்னர் லாரிகளில் நெரித்து அடைத்துக் கொண்டு அந்த லாரிகளில் இருந்து வியர்வை வெற்று உடல்களுடன் மக்கள் வெளியேறிய காட்சிகள் மறக்க முடியாததாக செய்திகளாக மாறின.

பிரதமர் அவர்கள் சமூக விலகல் கடைபிடிக்க வேண்டும், குடும்பங்களில் உள்ளவர்கள் தனித்தனி ரூம்களில் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். ஒரு சதுர மைலுக்கு குறைவான பரப்பளவில் 10 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். ஆசியாவின் மிகப்பெரிய சேரியான தாராவியில் இவர்கள் எங்கே சமூக விலகளை கடைபிடிப்பது? பத்திரிகையில் வந்த செய்தி மும்பையில் தோல் பதனிடும் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளி கன்ஷியாம் லால் தன்னுடைய அன்றாட ஊதியம் 200 ரூபாய். 8 பேர் கொண்ட குடும்பத்திற்கு உணவளிக்க வேண்டும், உணவு குறித்து கவலை இருப்பதால் என்னால் வைரசைப் பற்றிய கவலைப்பட முடியவில்லை.

உயரடுக்கு பிரிவினர், கை சுத்திகரிப்பு திரவம், மாம்பழக்கூழ் அடைக்கப்பட்ட காபி ஆகியவற்றை சேமித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், அதை செல்பி எடுத்து போட்டு சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகிறார்கள்.

ஆனால் மறுபுறத்தில் மிகப்பெரிய அடித்தட்டு மக்களுக்கு கழிப்பறை வசதிகள் எதுவும் இல்லாதது மட்டுமல்ல, தண்ணீர் இல்லாத போது சோப்பு போட்டு கை கழுவு என்கிறார்கள். குடிப்பதற்கு தண்ணீர் இல்லாதபோது அரசின் அறிவுரைகளை பின்பற்றுவது சாத்தியமா? அவர்களைப் பொறுத்தவரை சமூக விலகல் என்பது தங்களுக்கு கிடைக்காத, குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே கிடைக்கின்ற சலுகையாகவே இருக்கிறது.

கடந்த மாதத்தில் அண்டை நாடான சீனா உட்பட உலகின் பெரும்பகுதிகளுக்கு வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் குறித்து எச்சரிக்கையை எழுப்பிக் கொண்டிருந்த போது, டெல்லியில் ரத்தக்களறியை ஏற்படுத்திய படுகொலைகள் உலக அளவில் தலைப்புச் செய்திகளை உருவாக்கியிருந்தன. அந்தக் காலத்தில் 54 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். மோடியின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர் களின் வெறுப்பு நிறைந்த பேச்சுக்களாலேயே அந்த படுகொலைகள் (அமெரிக்க அதிபர் வந்த நேரம்) நிகழ்ந்திருக்கின்றன. தில்லி காவல்துறை அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் என்று பல்வேறு பத்திரிகைகளில் வந்திருந்தது. உலகமே இந்த தொற்று வைரஸ் நோய்க்கு முக கவசம், கையுறைகளையும் சேமித்துக் கொண்டிருந்தபோது தனது நாட்டு மக்களை சொந்த அரசாங்கமே தூண்டிவிடப்பட்ட வகுப்புவாத நெருப்பை அணைப்பதில் இந்தியா மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

புதுடில்லியில் நடந்த வன்முறையால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள், உறவினர்கள் மருத்துவமனைகளிலும், தற்காலிக நிவாரண முகாம்களில் வசித்து வந்தனர். கோவிட்-19ன் அச்சுறுத்தலை முன்னிட்டு அந்த முகாம்கள் அகற்றப்பட்டன. கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் எந்த உதவியும் கிடைக் காமல் போனது.

45 ஆண்டுகள் இல்லாத மிக மோசமான வேலையின்மையாலும், மக்களை பிளவுபடுத்து கின்ற தேசியவாதம் தீவிரமடைவதாலும் பாதிக்கப்பட்டிருந்த இந்தியாவிற்கு இப்போது இது மிகப்பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்த போகின்றது. குறிப்பாக சுகாதார பாதுகாப்பு மற்றும் வசதிகள் இல்லாத முறைசாரா தொழிலாளர்களுக்கு பெரும் அடியை தருகின்ற இந்த தொற்று நோயைக் கையாள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டுள்ள இந்தியாவுக்கு தொற்றுநோயை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. மத்திய அரசின் தாமதமான முடிவு என்றாலும் சேதத்தை குறைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கவே செய்கின்றன. பொது போக்குவரத்து பயணம், அனைவரும் ஒன்றுகூடுவது ஆகியவை அதிகளவில் குறைக்கப்பட்டுள்ளது. இது ஒருபுறம் இருந்தாலும் பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக பின்தங்கி இருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மத்திய, மாநில அரசுகள் அடுத்த சில வாரங்களில் இந்திய மக்களுக்கு மிகவும் நெருக்கடியான கால மாக இருக்கும். குறிப்பாக இந்திய ஏழை மக்களுக்கு.

### சீனாவுக்கு எதிரான தாக்குதல்

உலகத்தை அச்சுறுத்துகின்ற இந்தக் கொடிய கொரோனா வைரசை பரப்பியது சீனாதான் என்று பொய்யான தகவல்களை தொடர்ந்து வலைதளம் மூலமாகவும் பல்வேறு ஊடகம் மூலமாகவும் ஏன் நமது தோழர்கள் ஒருசிலர் கூட அப்படித்தான் நினைத்துக்கொண்டு வாட்ஸ் அப் மூலம் செய்திகளை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறான தகவலை திட்டமிட்டு மேற்கத்திய நாடுகள் பரப்புகின்றன.

அமெரிக்காவும் சில மேற்கத்திய நாடுகளும் சமீபத்தில் சீனாவுக்கு எதிராக தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. கோவிட்-19 என்னும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாதிப்புக்கு உள்ளானவர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையை சீனா மறைத்துவிட்டது என்றும், சீனாவிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மருந்துப் பொருட்கள் தரமற்றவையாக இருக்கின்றன என்று கூறி சீனாவின் மீது சேற்றை அள்ளி வீசுகின்றன. மேலும் இப்போது கொரோனா வைரஸ் பரவியிருப்பதற்கு சீனா தன் பொறுப்பு என கூறிக் கொண்டிருக்கின்றன.

இதற்கு காரணம் 1. அவர்கள் மத்தியில் சீனாவுக்கு எதிராக இருந்துவரும் உள்ளார்ந்த சித்தபிரமை நிலைப்பாடு 2. கொரோனா வைரஸ் தொற்றால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ள அதே சமயத்தில் சீனா அதை கட்டுக்குள் கொண்டு வந்து விட்டதைக் கண்டு ஏற்பட்ட விரக்தி

3.மேலை நாடுகளில் ஆள்வோரும் அவர்களின் தத்துவார்த்த மேட்டுக்குடியினரும் தங்கள் நாடுகளில் ஏற்பட்டுள்ள கொரோனா அவல நிலைக்கான காரணங்களை மக்கள் மத்தியில் விலக்குவதில் தோல்வி அடைந்துள்ளதாலும் அதன் மூலம் மக்களிடையே தங்கள் மீது ஏற்படும் கோபத்தை திசை திருப்புவதற்காக சீனாவை பலிகடாவாக பயன்படுத்த முயல்வது.

சீனா இந்த தொற்று நோயை கட்டுப்படுத்துவதில் மிகப்பெரும் வேலை செய்திருக்கிறது. இரண்டு மாதங்களில் நிலைமையை சரி செய்திருக்கிறது. 100 கோடி மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள ஒரு பிரம்மாண்டமான சமூகத்தில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்கள் மற்றும் அதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை என்பது குறைந்த மக்கள்தொகை உள்ள நாடுகளில் ஏற்பட்ட பாதிப்பை விட மிகவும் குறைவு. இது சீன அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையேயான வியத்தகு ஒற்றுமையை உலகில் உள்ள ஒவ்வொருவர் மத்தியிலும் எடுத்துச் சென்றிருக்கிறது. எனவே சீனா மீது வாரி இறைக்கப்படும் எவ்வித அரசியல் சேற்றையும் துடைத்தெரிய போதுமான அளவிற்கு இருக்கிறது.

சீனா தொற்றுக்கு பிந்தைய மறு கட்டுமானத்தை தொடங்கியிருக்கும் முதல் நாடாகும். சீனாவில் கொரோனா தொற்று கட்டுப்படுத்தப் பட்டு விட்டாலும் அது முற்றிலும் ஒழித்துக் கட்டப்படவில்லை, களைய வேண்டிய இடர்பாடுகள் இன்னும் இருக்கின்றன. தொற்றுக்கு எதிராக போராட்டத்தைத் தொடர்வதும் மிகவும் கடினம். சீனாவின் ஆய்வு அது எவ்வளவு தான் மென்மையானதாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் மிகவும் மதிப்பு வாய்ந்த தாகும்.

சீனாவுக்கு எதிராக முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தாக்குதல் தொடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை சீனாவை தாக்குபவர்களின் தவறான வாதங்களையும் தவறுகளை சுட்டிக் காட்டி உறுதியுடன் அடித்து வீழ்த்திடும். இத்துடன் உண்மைகள் மூலமாக அபத்தமான குற்றச்சாட்டுகள் அதற்கு எதிரான ஆதாரங்களை அளிப்பதன் மூலம் அடித்து நொறுக்கப்பட்டு விடும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறது.

அமெரிக்காவில் இந்த தொற்று பரவியதற்கு சீனா தான் என்று அவிழ்த்துவிடப்பட்ட சில முக்கியமான ஆதாரங்களை வெளியிட்டிருப்பதன் மூலம் அமெரிக்கா மக்களால் கோபத்துடன் நிராகரிக்கப்படும். அமெரிக்கா தொற்றுநோய் நிபுணர் அந்தோணி ஃபவுசி மதிப்பின்படி அமெரிக்கா இந்த தொற்றுநோய்க்கு எதிராக கவனம் செலுத்தவில்லை என்றால் இறப்பு என்பது ஒரு லட்சத்துக்கும் 2 லட்சத்திற்கும் இடையிலான இருந்து விடும் என்று கூறி இருப்பதாலும், அதேசமயத்தில் சீனா சமாளித்திருப்பதும் அவர்கள் அவிழ்த்துவிடும் பொய்களை நிலைத்து நிறுத்த முடியவில்லை.

சீனாவின் கட்டமைப்பும் இத்தனை பெரிய துயரத்தை எதிர்கொள்வதில் குறைபாடு உள்ளது என்றபோதிலும் அது மக்களுக்கான சேவை செய்து கொண்டே இருக்கிறது. நெருக்கடி காலங்களில் அது எப்போதும் மக்களின் வாழ்க்கை மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கோவிட்-19 மரணங்களை ஒரு லட்சத்திற்குள் வைத்திருப்பது மிகவும் நல்ல வேலையாக இருக்கும் என்று கூறியிருக்கிறார். இவ்வாறு சீனத் தலைவர் எவரேனும் வார்த்தைகளை உதிர்த் திருந்தார்களால் இந்நேரம் அவர் சாபங்களால் சபிக்கப்பட்டிருப்பார்கள்.

இதிலிருந்து தெரிகிறதா அமெரிக்கா மக்களை எவ்வாறு பாதுகாக்கப்படுகிறார் டிரம்ப் என்பது புரிந்திருக்கும். மேலும் அமெரிக்காவில் மருத்துவமனைகள் பெரும்பாலும் தனியார் மருத்துவமனை. அதனால் மக்களுக்கு சேவை புரிவதில் எந்தவிதமான அக்கறையும் செலுத்துவதில்லை.

நம் வரலாற்றில் முன்னெப்போதும் சந்தித்திராத இந்த கோவிட்-19 கொரோனா வைரஸ் நோயை எதிர்கொண்டு இந்தப் பேரிடரிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணியில் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக இருப்போம் என்றும், களத்தில் நிற்பது தனியார் துறைகளல்ல... அரசுத் துறைகளே... எனவே கொடிய தொற்று நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பது அரசுத் துறைகளின் முக்கியத் துவத்தை உணர்ந்து மத்திய, மாநில அரசுகள் தனியார்மயத்தைக் கைவிட்டு அரசு துறை காலியிடங்களை நிரப்பிடவும், புதிய பணியிடங்களை உருவாக்கிடவும் அதன் மூலம் அரசுத் துறை கட்டமைப்பை வலுப்படுத்திடவும் தமிழக அரசு முன்வர வேண்டும். அதற்கான இயக்கங்களை தொடர்ந்து மேற்கொள்வோம்.❖

# வண்ணத்துப் பூச்சியின் சிறகுகள்!

வாழ்க்கையில் சில பேர் வெற்றி பெற்றுக்கொண்டே இருக்கிறார்கள். பலபேர் தோற்றுக்கொண்டே இருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்களிடம் ஏதோ ஒரு சூட்சுமம் இருக்கிறது. அவர்களுடைய தொடர் வெற்றிக்கு ஏதோ ஒரு பார்முலா அதாவது செயல்திட்டம் வைத்திருக்கிறார்கள். அப்படியானால் தோல்வியடைந்தவர்கள் எந்தவித செயல்திட்டமும் இல்லாமலா அந்தக் காரியத்தில் இறங்கியிருப்பார்கள்? இருக்கும். ஆனால் அந்த செயல் திட்டத்தை சரியான நேரத்தில், சரியான திசையில், சரியான விகிதத்தில் உபயோகிக்கத் தவறியிருப்பார்கள். வெற்றி பெற்றவர்கள் செய்த உழைப்புக்கு எந்தவகையிலும் குறைந்ததல்ல தோல்வியடைந்தவர்கள் போட்ட உழைப்பு. ஆனால் தோல்வியடைந்தவர்கள் வெற்றியடைய முடியாமல் போனதற்கு காரணம் அவர்களிடம் பொறுமையும், சகிப்புத்தன்மையும், போராட்ட குணமும் இல்லாமல் போனதுதான்.

வெற்றிபெற்றவர்களை உற்று நோக்கிப் பார்த்தால் அவர்கள் உழைப்பை மட்டுமே நம்பிப் பயணித்திருக்க மாட்டார்கள். காலம், நேரம், சூழ்நிலை இவற்றை கவனத்துடன் கருத்தில் கொண்டே வெற்றிக்கான திசை நோக்கி பயணித்திருப்பது புரியும். கொட்டும் மழையில் உப்பு விற்பவனும், வாடைக்காற்றில் மாவு விற்பவனும் நட்டமடைவதை யாரும் தடுக்க முடியாது.

நேரம். வெற்றி பெற நினைப்பவர்கள் நேர மேலாண்மையை கடைபிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும். விமான நிலையத்திற்கோ, ரயில் நிலையத்திற்கோ அல்லது தேர்வு மையத்திற்கோ குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே நாம் சென்று விட தயாராவதைப் போல வெற்றி எனும் குறிக்கோளை அடைவதற்கு தேவையான அனைத்து வேலைகளையும் முன்கூட்டியே தீர்மானித்துவிட்டு அதற்கான நேரத்திற்காக காத்திருக்க வேண்டியதும் வெற்றிக்கான விதிமுறைகளில் முக்கியமானதாகும். வெற்றியடைவதில் டைமிங் மிகவும் முக்கியமானது என்றாலும் அதன் அர்த்தம் எல்லா நேரங்களிலும் ஓடிக்கொண்டே இருப்பது என்பதல்ல. சில இடங்களில் ஓடவிட்டு காத்திருப்பதும் வெற்றிக்கான வழிமுறைகளில் ஒன்றாகும். ஓடமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருக்கும் கொக்கின் பொறுமையும், காத்திருப்பும் வெற்றிபெற விரும்புபவர்கள் கவனத்தில் கொள்ளத் தக்கவை.

ராபர்ட் ப்ராஸ்ட் என்ற அமெரிக்க கவிஞர் இருபது ஆண்டுகள் எழுதிக் கொண்டே இருந்தார். அவருடைய 39ஆவது வயதில்தான் அவருடைய ஒரு புத்தகத்தின் ஒரே ஒரு பிரதி விற்றது. ஆனால் இன்று அவருடைய கவிதைகள் 22க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகத்தின் மிகச் சிறந்த புலிட்சர் பரிசை அவர் இதுவரை நான்குமுறை பெற்றிருக்கிறார். வால் டிஸ்னி எவ்வளவு பெரிய சிந்தனையாளர். அவர் ஒரு நாளிதழின் தலைமை பதிப்பாசிரியரால் கற்பனை வளம் இல்லையென்று வேலையிலிருந்து துரத்தப்பட்டார். தன்னுடைய 21ஆவது வயதில் தன்னிடமிருந்த அனைத்து சொத்துக்களையும் இழந்து படுக்க மெத்தைகூட இல்லாமல் கட்டாந் தரையில் படுத்து உறங்கி கஷ்டப்பட்டார். ஆனால் அதன்பிறகு கடினமாக உழைத்து முன்னுக்கு வந்து உலகம் வியக்கும் டிஸ்னிலாண்டை நிறுவினார். கிரிகர் மெண்டெல் ஆஸ்திரிய தாவரவியல் நிபுணர். இவர் ஒரு உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் துறையின் ஆசிரியராக வேண்டி எழுதிய தேர்வில் தோற்றுப்போனார். அவர் தோற்ற பாடம் உயிரியல். ஆனால் அதன்பின்னர் சில வருடங்கள் கழித்து இவருடைய உயிரியல் பற்றிய ஆராய்ச்சியால்தான் நவீன அறிவியல் தொழில்நுட்பம் (ஜெனிடிக்ஸ்) உருவானது. ஆரம்பத்தில் தோற்றுப்போனவர்கள் அதன்பிறகு வெற்றிகளை வசமாக்கியது எப்படி? அவர்களுடைய கடுமையான உழைப்பும், போராட்ட குணமும், பொறுமையும்தான் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தன. வெற்றி என்றால் தோல்விகள் இல்லாமை என்று அர்த்தமல்ல. இறுதிக் குறிக்கோளை அடைதல் என்பதாகும். அது இறுதிப்போரை வெல்வது போன்றது. இடையில் வரும் ஒவ்வொரு சண்டையும் அல்ல என்கிறார் எட்வின் சி.ப்ளிஸ்.

டாக்டர் பெஞ்சமின் ப்ளூம் என்ற ஆராய்ச்சியாளர் சிகாகோ பல்கலைக் கழகத்தில் பதினோறு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தார். சிறந்த சிந்தனையாளர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள் மற்றும் பலதுறைகளில் உலகத்தில் முதல் இருபது இடங்களுக்குள் இருக்கும் பலர் வெற்றி பெற்றது எப்படி என்ற ஆராய்ச்சி செய்தார். இந்த ஆராய்ச்சிக்காக அவர் சம்பந்தப்பட்டவர்களின் தாய் தந்தையர், ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் போன்றவர்களை அணுகி நேர்காணல்

செய்தார். அவருடைய ஆராய்ச்சியின் முடிவில், பெரிய சாதனைகளைச் செய்தவர்களின் வெற்றிக்குக் காரணம் அதிர்ஷ்டமோ, குடும்ப சூழலோ அல்ல, கடுமையான பயிற்சியும், திடமான முயற்சியும், மனந்தளராத போராட்டகுணமும்தான் என்று தெரிய வந்தது.

சில மனிதர்களின் வெற்றிக்கு அதிர்ஷ்டம்தான் காரணம் என்பார்கள். சிபாரிசு இருந்தால் நானும் வெற்றி பெற்றிருப்பேன். ஏதோ பேருக்காக இந்தப் போட்டியில் கலந்து கொள்கிறேன். இங்கே ஏற்கெனவே வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். இந்தப் போட்டி என்பது ஒரு பார்மாலிட்டிதான் என்று சிலர் புலம்புவதைக் காணலாம். எனக்கு கிடைக்காது என்ற எதிர்மறை எண்ணங்களே இவர்கள் மனதை ஆட்கொண்டிருக் கின்றன என்பதை இவர்களின் புலம்பல்கள் கூறுகின்றன. இப்போது முடியாவிட்டால் என்ன? தொடர்ந்து முயற்சி செய்வேன், கடுமையாக உழைப்பேன், ஒருநாள் வெற்றிக்கனி பறிப்பேன் என்று இவர்கள் தங்கள் மனதில் நேர்மறை எண்ணங்களை விதைக்காததுதான் இவர்கள் முன்னேறி வெற்றிபெற இயலாமல் போனதற்கு காரணம். பெரும்பாலான மனிதர்கள் தோல்வி அடைவது திறமையின்மையாலோ அறிவின்மை யாலோ அல்ல, மாறாக, விருப்பமின்மையாலும், வழிகாட்டுதல் இன்மையாலும், அர்ப்பணிப்பு உணர்வு இன்மையாலும், ஒழுக்கமின்மையாலும்தான் என்கிறார் வியாபார ஆலோசகர் ஷிவ் கெரா.

வெற்றி என்றால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவது என்று அர்த்தமில்லை. வெற்றி என்பது மன ஊக்கம், இலக்கை அடையும் விருப்பம், எப்படியும் இலக்கை அடைந்தே தீரவேண்டும் என்ற மனப்பாங்கு, கடின உழைப்பு போன்றவற்றால் ஏற்படும் விளைவாகும். வாழ்க்கையில் நாம் எப்படி சோதனைகளை எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து அவை துன்பமாகவோ வெற்றியாகவோ அமையலாம். முயற்சி இல்லாமல் கிடைத்த சில வெற்றிகளை விட போராடிப் பெற்ற வெற்றிகளே உயிர்ப்பானவை. இன்று அரசு ஊழியர்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் ஏதோ அரசின் காருண்யத்தால் பெறப்பட்டவை அல்ல. அவை அனைத்தும் கடுமையான போராட்டங்கள் மூலம் பெறப்பட்டவை. அதனால்தான் அரசாங்கங்கள் இன்று எந்த உரிமைகளின் மீதும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவுகள் எடுத்துவிட முடியாத நிலை உள்ளது. தடைகளைத் எப்போதுமே எதிர்கொள்ளாதவர்களை விட தடைகளைத் தாண்டி வெளி வந்தோர் மகிழ்ச்சியான மனநிலையில் உள்ளவர்களாக இருப்பர். வெற்றி என்பது பதவியை வைத்து அளக்கப்படுவதில்லை. அந்தப் பதவியை அடைவதற்கு கடந்து வந்த தடைகளை வைத்தே அளக்கபடுகிறது. அரசு ஊழியர்களின் உரிமைகளுக் கான வெற்றி என்பது போராட்டங்களால் அடையப்பட்டவை. போராட்டங்கள் இல்லாத வெற்றிகள் எதுவும் அரசு ஊழியர் வரலாற்றில் கிடையாது. கெஞ்சிப் பெறுவோம், பணிந்து பெறுவோம், அடங்கிப் பெறுவோம் என்று கூவுகிற கோழிகள் அரசு ஊழியர்களுக்கு எந்த விடியலையும் பெற்றுத் தரவில்லை என்பதுதான் திரும்பத் திரும்ப நாம் கண்டுவரும் வரலாறு. போராட்டங்களின்றி பெறும் வெற்றி எப்படியிருக்கும்? இந்தக்கதையை படியுங்கள்:-

ஒரு உயிரியல் ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு கம்பளிப் புழு எப்படி வண்ணத்துப் பூச்சியாக மாறுகிறது என்பதை விளக்க ஒரு வண்ணத்துப்பூச்சி கூட்டினைக் காட்டி, “அடுத்த சில மணி நேரங்களில் வண்ணத்துப்பூச்சி தனது கூட்டிலிருந்து போராடி வெளிவரப் போவதை காணுங்கள், ஆனால் அதற்கு நீங்கள் யாரும் உதவக்கூடாது’’ என்று சொல்லிவிட்டு வெளியே சென்று விட்டார்.

மாணவர்கள் காத்துக் கொண்டிருந்தனர். கூட்டிலிருந்து வண்ணத்துப்பூச்சி வெளியே வர போராடியது. மாணவர்களில் ஒருவன் அதன்மீது இரக்கப்பட்டு, வண்ணத்துப் பூச்சி தன் கூட்டிலிருந்து வெளியே வர உதவுவதற்குத் தீர்மானித்தான். அந்த வண்ணத்துப் பூச்சி போராடத் தேவையின்றி எளிதாக வெளியே வரும் பொருட்டு அந்தக் கூட்டை உடைத்தான். ஆனால் வெளியே வந்த வண்ணத்துப் பூச்சி சிறிது நேரத்தில் இறந்துவிட்டது. ஆசிரியர் திரும்பி வந்ததும் அங்கே என்ன நடந்தது என்பதை மற்ற மாணவர்கள் அவரிடம் விவரமாகச் சொன்னார்கள்.

அப்போது அந்த ஆசிரியர் வண்ணத்துப்பூச்சி போராடாமல் வெளியே வர உதவிய மாணவனைப் பார்த்து, “தம்பி நீ ஏதோ வண்ணத்துப் பூச்சிக்கு உதவுவதாக நினைத்துக் கொண்டு அதை கொன்று விட்டாய் பார். வண்ணத்துப் பூச்சி கூட்டிலிருந்து வெளியே வரப் போராடும் போராட்டம் உண்மையில் அதனுடைய சிறகுகளை வளர்க்கவும், பலப்படுத்த வும் உதவும் என்பதுதான் இயற்கையின் சட்டம். வண்ணத்துப்பூச்சியின் வண்ணமயமான சிறகு விரிப்பு போராட்டத்திலிருந்தே தொடங்குகிறது. மனித வாழ்க்கையும் அப்படியே’’ என்றார். போராட்டங்களற்ற வாழ்க்கையும் வெற்றியும் சிறகுகளைத் தராது சிலுவைகளைத்தான் தரும். நாமும் வண்ணத்துப் பூச்சியாய் சிறகுகளை விரிப்போம்.

**- ஜிஜி**

## சர்வதேச மகளிர் தினம்



# மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழியேற்பு

மார்ச் 8 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் 11.03.2020 அன்று மெழுகுவர்த்தி ஏந்தி அனைத்துலக மகளிர் உரிமைக்காக சபதம் ஏற்றனர். அதன் ஒரு பகுதியாக...

### திருவாரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருவாரூர் மாவட்டத்தின் மகளிர் துணைக்குழு சார்பில் மகளிர் கருத்தரங்கம் மாவட்ட அமைப்பாளர் சசிகலா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் முன்னிலை வகிக்க மாவட்ட செயலாளர் வெ.சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். முன்னதாக ஒவ்வொரு பெண்களும் வீட்டிலும், தாங்கள் பணிபுரியும் அலுவலகங்களிலும், ஒவ்வொரு சமுதாயப் பணிகளிலும் மெழுகுவர்த்தியைப் போன்று தங்களை தாங்களே வருத்திக்கொண்டு ஒளி வெளிச்சம் கொடுக்கின்றனர் என்பதற்கு சான்றாக அனைத்து மகளிரும் மெழுகு வர்த்தியை ஏந்திய வீராங்கனைகளாக மாவட்ட மகளிர் கருத்தரங்க நிகழ்விற்கு பேரணியாக வருகை தந்தனர்.

மாவட்ட மகளிர் கருத்தரங்கத்தினை வாழ்த்தி மாவட்ட தலைவர் எம்.ராஜமாணிக்கம், மாவட்ட பொருளாளர் சி.பிரகாஜ், திருவாரூர் வட்டத் தலைவர் அசோக், குடவாசல் வட்ட தலைவர் வி.தெட்சிணாமூர்த்தி, மன்னார்குடி மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுகுமார், எம்.ஆர்பி. செவிலியர் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.சிவபிரசாத் ஆகியோர் பேசினர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட துணைத் தலைவர் சுபலட்சுமி, தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தமிழ்சுடர், தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்க மாநில செயலாளர் பி.பரமேஸ்வரி, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் எஸ்.கற்பகம், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க வலங்கைமான் வட்ட செயலாளர் ராஜேஸ்வரி, திருவாரூர் வட்டத் தலைவர் விஜயா ஆகியோர் சமுதாயத்தில் இன்றைய பெண்களின் நிலை குறித்தும், எதிர்காலத்தில் பெண்களின் பங்கு, சங்க போராட்டங்களில் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களை போதுமான பாதுகாப்பினை ஒவ்வொருவரும் உறுதி செய்திட வேண்டுமென்றும், மாவட்ட அளவில் விசாகா கமிட்டியினை அமைத்திட வேண்டியதன் அவசியத்தினையும் எடுத்துரைத்தனர். நிறைவாக மாவட்ட மகளிர் கருத்தரங்கத்திற்கு வருகைத்தந்த அனைவருக்கும் மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் க.தேவி நன்றி கூறினார்.

### கிருட்டினகிரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கிருட்டினகிரி மாவட்ட மையம் சார்பில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் மற்றும் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழியேற்பு நிகழ்ச்சி 11.03.2020 அன்று கிருட்டினகிரி மாவட்ட மையத்தின் சார்பாக சூளகிரி - சென்றாயசெட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் துணைக்குழு



அமைப்பாளர் ஜெகதாம்பிகா வரவேற்புரையாற்றினார். அரசுப் பணி ஓய்வுபெற்ற முன்னாள் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் நாகரத்னா அவர்களுக்கு மாநில துணைத் தலைவர் பழனியம்மாள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கினார்.

பின்னர் நடைபெற்ற கருத்தரங்கில் "வீடு-அலுவலகம் - சங்கம் - பெண்கள்' என்ற தலைப்பில் மாநில துணைத் தலைவர் பழனியம்மாள் கருத்துரையாற்றினார். சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விமல் ரவிக்குமார், பாலாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்வு தொடங்கும் முன்பாக சங்க விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. நிகழ்ச்சிகளை மாவட்ட செயலாளர் நடராஜன் ஒருங்கிணைத்தார். இறுதியாக அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தி சர்வதேச மகளிர் தின உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். சூளகிரி வட்ட செயலாளர் கனகவல்லி நன்றி கூறினார். நிகழ்ச்சியில் 160 பெண்கள் உட்பட 185 பேர் கலந்துகொண்டனர்.

### தருமபுரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக உலக மகளிர் தினத்தையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு உலக மகளிர் தினவிழா நிகழ்வு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக்குழு தலைவர் இளவேனில் மகளிர் சிறப்பு பற்றி விளக்கிப் பேசினார். இதில் 60க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்

### நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் 11.03.20 மாலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பா.ராணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் சி.வாசுகி வரவேற்புரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் ஜெ.ஜம்ருத் நிஷா தீர்மானங்களை முன்மொழிந்தார். மாவட்டத் தலைவர் து.இளவரசன், மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். "புரையோடிய பொய்மையெல்லாம் புரண்டோடட்டும் " என்ற தலைப்பில் எழுத்தாளர் ரேவதி கருத்துரையாற்றினார்.

பெண் கல்விக்கு ஊக்கமளிக்க வேண்டும், பணியிடத்தில் பெண்களுக்கெதிரான பாலியல் தொந்தரவுகளை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும், பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பணி செய்யும் இடங்களில் புகார் குழு ( விசாகா கமிட்டி ) அமைத்திட வேண்டும், பணி செய்யும் இடங்களில் பெண் தொழிலாளர்களுடைய குழந்தைகளை பாதுகாக்க குழந்தை காப்பகம் அமைக்க வேண்டும், இடைவெளி இல்லாமல் பெண்களை 5 மணி நேரத்துக்கு மேல் வேலையில் ஈடுபடுத்துவதை தடைசெய்ய வேண்டும், பெண்களுக்கு ஆண்களுக்கு இணையாக சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும், உழைக்கும் பெண் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச கூலியை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பங்கேற்ற பெண்கள் மெழுகுவர்த்தி ஏற்றி உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கலா நன்றியுரையாற்றினார்.

### திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மெழுகுவர்த்தி ஏந்தி அனைத்து மகளிர் உரிமைக்காக சபதம் ஏற்கும் நிகழ்வு செய்யாறு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது கூட்டத்திற்கு கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் தோழர் க.பிரபு தலைமை தாங்கினார் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை



அலுவலர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர் தோழர்.ச.பாரி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்ட செயலாளர் தோழர்.செ. குப்புசாமி, மகளிர் துணைக் குழு உறுப்பினர் தோழர்.சே.சத்யா, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர். சம்பத், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் வட்ட பொருளாளர் தோழர். பூங்காவனம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார்கள். முடிவில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் உதய குமார் நன்றி கூறினார்.

அதேபோல் செங்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் திருமதி.அ. மிருணாளினி தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் செங்கம் ஒன்றியக் குழு தலைவர் விஜியராணி குமார் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்ட தலைவர் தோழர் கோ. அண்ணாமலை வாழ்த்தி பேசினார். முடிவில் தோழர்.ஹரிராம் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் திரளாக பெண் தோழர்கள் பங்கேற்றார்கள்.

### தஞ்சாவூர்

மாவட்டத்தில் மகளிர் தின விழா *11.3.2020* அன்று பெசன்ட் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. பொதுமக்கள் மத்தியில் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி கோரிக்கை அட்டையுடன் மகளிர் ஒடுக்கு முறைக்கு எதிராகவும், பாலியல் கொடுமைக்கு எதிராகவும் உறுதிமொழி எடுக்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு மாவட்டத் தலைவர் கோ.தண்டபாணி தலைமையேற்றார். மாவட்ட அமைப்பாளரும், மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினருமான செல்வி வரவேற்றார். முன்னாள் மாவட்டத் தலைவரும், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினருமான கோவிந்தராசு வாழ்த்தி பேசினார். குந்தவை நாச்சியார் கலைக் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசியரும் முனைவருமான தி.ஹேமலதா கருத்துரை வழங்கினார். மாநில செயலாளர் சண்முகம் சிறப்புரை நிகழ்த்தினார். நிறைவாக மாவட்ட மகளிர் துணைக்குழு இணை அமைப்பாளர் ச.ஹேமலதா நன்றி கூறினார்.

❖

## சொந்த நாட்டில் அகதிகளாய்...



பாலுக்கு அழும் குழந்தையும்
பசியில் வாடும் மனைவியும் வெறும்
சட்டிமுட்டிகளின் சத்தங்களில்
சமாதானமாகவில்லை
கால் வயிற்று கஞ்சிக்கும் வழியில்லை
பஞ்சம் பிழைக்க வந்த பரதேசிகள்
கொரான எனும் கொடிய நோயால்
சொந்த நாட்டில் அகதிகளாய்...
ஓ வென்று அழுது
ஒப்பாரி வைக்க நேரமில்லை
தலையில
சுமைகளையும்
நெஞ்சில் சோகத்தையும் சுமந்து
ஆகாச குடை பிடித்து
ஆயிரம் மைல்கள் கடக்கவே
ஒட்டிய வயிற்றுடனும்
வீங்கிய கால்களுடனும் வீதியில் நடக்கின்றோம்
அருந்த உணவுமில்லை பருக தண்ணீரில்லை
உசிருமட்டும்
மிச்சமிருக்க மாநில எல்லைக்கோடுகளை தாண்டியபடியே
செல்கின்றோம்
நீர் வழிந்து காய்ந்துபோன வரண்ட விழிகளில்
வழியெல்லாம் தேடுகின்றோம்
அந்த லட்சுமணன் கோடுமட்டும் கடைசி வரை
தெரியவே இல்லை...
எல்லோரையும் கையை மட்டும் கழுவச் சொன்னீர்
எங்களை மட்டும் மொத்தமாய் கை கழுவி விட்டீர்களே!

- **தெ.வாசுகி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

பெறுநர்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,**
தமிழக அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு,**

பொருள் : கொரோனா தொற்று மற்றும் கோவிட்-19 காய்ச்சல் - கொரோனா தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்காக தமிழக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதி தந்து உதவுதல் – அரசு ஊழியர்கள் தங்கள் ஒருநாள் சம்பளத்தை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக தருதல் – தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறிவிப்பு - தொடர்பாக.

* * * * *

வணக்கம்.

உலகம் முழுவதிலும் மனித குலத்திற்கு பெரும் சவலாக எழுந்துள்ள கொரோனா வைரஸ் தொற்று நோய் இன்றுவரை 15000 மக்களை பலிவாங்கியுள்ளது. இந்த கொடிய வைரஸ் தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கை நான்கு லட்சத்தினை தொட்டுவிடும் துாரத்தில் உள்ளது. சைனாவின் வூஹான் மாநிலத்தில் உருவானதாக அறியப்படும் இந்த வைரஸ் தொற்றுக்கு இன்றுவரை மருந்துகளோ, தடுப்பு மருந்துகளோ கண்டுபிடிக்கப்படாத நிலையில் உயிரிழப்புகள் பெருகி வருவதை தடுக்க முடியாமல் மருத்துவ உலகம் திண்டாடி வருகிறது.

பல நாடுகள் தங்கள் எல்லைகளை மூடிக்கொண்டு தனிமைப்படுத்திக் கொண்டுள்ள நிலையில் அதனால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் பெரிய சவால்களாக உருவெடுத்து வருகின்றன. இந்தியாவில் ஏற்கெனவே உள்ள பொருளாதார மந்த நிலையில் இத்தகைய நடவடிக்கைகளால் மேலும் மேலும் அதன் பாதிப்புகள் நாட்டின் வளர்ச்சியை படுபாதாளத்திற்கு தள்ளிவிடும் என்பது கண்கூடாகவே தெரிகிறது.

கொரோனாவின் பரவல் இந்தியாவில் அதிகரித்து வரும் நிலையில் விமான சேவைகளும், ரயில் சேவைகளும், பேருந்து சேவைகளும் 21 நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டு சுய ஊரடங்குகளும், 144 தடைகளும் விதிக்கப்பட்டுள்ளது நாட்டில் மேலும் மேலும் வறட்சியை ஏற்படுத்தி விடும் அபாயத்தையே உணர்த்துகிறது.

திடீர் ஊரடங்குகளும், 144 தடைச் சட்டங்களும் தவிர்க்க இயலாததாக மாறிவிட்ட நிலையில் வீடற்றவர்களும், அன்றாடங் காய்ச்சிகளும், தினக்கூலித் தொழிலாளர்களும், அமைப்புசாரா தொழிலாளர்களும் வாழ்வாதாரங்கள் இன்றி உடனடி பாதிப்புகளுக்கு ஆளாகக்கூடிய நிலை எழுந்துள்ளதை உணர்ந்து அரசாங்கம் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான அனைத்து உத்தரவாதங்களையும் ஏற்பாடுகளையும் உடனடியாக மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

அதே வேளையில், தமிழக அரசுத் துறைகளில் பணிபுரியும் அத்தியாவசியத்துறை தவிர்த்த பெரும்பாலான ஊழியர்களுக்கு 21 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், அரசாங்க ஊதியம் பெறும் இதர பணிப்பிரிவினரும் கொரோனாவிற்கு

எதிரான அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க முன்வரவேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

அரசாங்கத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் அனைவரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஒரு கடுமையான காலகட்டத்திலிருந்து அரசும், நாடும் வெளிவர அரசுக்கு உதவியாக இருந்து அனைத்து கடமைகளையும் செய்ய வேண்டும் என்றும் கொரோனா வைரஸ் மேலும் மேலும் பரவாமல் தடுக்க அரசாங்கம் சொல்லும் வழிமுறைகளை அரசு ஊழியர்களும் அவர்தம் குடும்பத்தினரும் கடைபிடித்து, நண்பர்கள், உறவினர்கள், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் தவறாமல் கடைபிடிக்கிறார்களா என்பதை கண்காணித்து அவர்கள் அத்தகைய வழிமுறைகளை கடைபிடிக்க வலியுறுத்த வேண்டும் என்றும் வீட்டை விட்டு வெளியில் வராமல், கும்பல் கூடாமல் சிலநாட்கள் தனித்து இருக்க அனைவருக்கும் அறிவுறுத்த வேண்டும் என்றும் அடிப்படை தேவைகளுக்கான பொருட்களை வாங்குவதற்காக வெளியே வருவதைத் தவிர சில நாட்களுக்கு சுயகட்டுப்பாட்டுடன் தனித்திருக்க தங்களுக்குத் தெரிந்த அனைத்து மனிதர்களுக்கும் அலைபேசி மூலமாகவும், குறுஞ்செய்திகள் வாயிலாகவும் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து அனைத்து மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகளை அறிவுறுத்தியுள்ளது.

மேலும் அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் இந்த நேரத்தில் அரசுக்கு செய்யும் நிதி உதவியால் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளான ஊரடங்கு உத்தரவு, மாவட்டை எல்லை மூடல், 144 தடை போன்றவற்றால் உடனடியாக பாதிக்கப்படக்கூடிய வீடற்றவர்கள், தினக்கூலித் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள், யாசகம் கேட்போர் போன்ற, வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படக்கூடிய நபர்களின் அன்றாட உணவுத் தேவைகளுக்கும், கொரோனா தொற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள், நோயாளிகளின் உடற்கழிவுகளை, இரத்தக் கசிவுகளை அகற்றி அவர்களை பாதுகாக்கும் செவிலியர்கள் ஆகியோருக்கு தரமான பாதுகாப்பு உபகரணங்களை மருந்துகளை இதர மருத்துவ உபகரணங்களை அரசாங்கத்தால் வாங்கி வழங்கவும், நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை கொடுக்கவும் ஓரளவிற்கேனும் தங்களால் இயன்ற உதவிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று அனைத்து அரசு ஊழியர்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

அரசு ஊழியர்கள் சமூக அக்கறையும், பொறுப்புணர்வும், இக்கட்டான சூழ்நிலைகளில் அரசுடன் ஒன்றிணைந்து நிற்கும் தன்மை கொண்டவர்கள் என்பதை இந்த சமூகத்திற்கு எப்போதும் உணர்த்தி வருகிறோம். அந்த உணர்வு இப்போதும் அரசு ஊழியர்களுக்கு உள்ளது என்பதை அரசுக்கும், மக்களுக்கும் உணர்த்தும் வகையில் அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய ஒருநாள் ஊதியத்தை கோவிட்-19 நோய்த் தடுப்பு நிவாரண நிதிக்காக வழங்கிட முன் வந்துள்ளனர்.

நலிந்த மக்களின் வாழ்வாதாரத்தை கோவிட்-19 பாதித்து விடாமல் காக்கவும், கொரோனா பாதித்த பொதுமக்களுக்கு உரிய சிகிச்சை அளித்து அவர்கள் உயிர்களை காக்க அரசு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசுத்துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களும் தங்களுடைய ஒரு நாள் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளனர் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தெரிவித்துக்கொள்கிறது.

**நன் மதிப்புகளுடன்,**

தங்கள் நம்பிக்கையுள்ள.

**(மு.அன்பரசு)**
மாநில தலைவர்

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்

நகல்

1. தலைமைச் செயலாளர் அவர்கள்,
   தமிழ்நாடு அரசு, சென்னை 600009
2. செயலாளர் அவர்கள்,
   பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை,
   தமிழ்நாடு அரசு, சென்னை-600009

## கரத்தால் தனித்து நின்று, கருத்தால் ஒன்றிணைந்து எல்லைதாண்டி வந்த கொள்ளைத்தொற்று கொரோனாவை கொல்லைப்புறமாக விரட்டியடிப்போம்!

**வீடற்று வாழ்வோருக்கும், ஊரடங்கால் வேலையற்றுப் போகும் கூலித் தொழிலாளர்களுக்கும், யாசகம் பெறுவோருக்கும் உதவிடவும், மருத்துவர்கள், செவிலியர்களின் பாதுகாப்பு உபகரணங்களுக்காகவும்**

**ஒருநாள் ஊதியத்தை அரசுக்கு நிதியாக அளிப்போம், இக்கட்டான இச்சூழ்நிலையில் அரசுக்கும் மக்களுக்கும் அரணாக இருப்போம்!**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறிவிப்பு!**

உலகம் முழுவதிலும் மனித குலத்திற்கு பெரும் சவலாக எழுந்துள்ள கொரோனா வைரஸ் தொற்று நோய் இன்றுவரை 15000 மக்களை பலிவாங்கியுள்ளது. இந்த கொடிய வைரஸ் தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கை நான்கு லட்சத்தினை தொட்டுவிடும் தூரத்தில் உள்ளது. சைனாவின் வூஹான் மாநிலத்தில் உருவானதாக அறியப்படும் இந்த வைரஸ் தொற்றுக்கு இன்றுவரை மருந்துகளோ, தடுப்பு மருந்துகளோ கண்டுபிடிக்கப்படாத நிலையில் உயிரிழப்புகள் பெருகி வருவதை தடுக்க முடியாமல் மருத்துவ உலகம் திண்டாடி வருகிறது. இருமல், காய்ச்சல், மூச்சுத் திணறல் என்று நோயின் அறிகுறிகள் குறித்து கூறப்படும் தகவல்களைத் தாண்டியும் பல புதிய அறிகுறிகளை தினம்தினம் மருத்துவர்கள் கூறி வருகிறார்கள். அறிவியல் தொழில்நுட்பத்தால் உள்ளங்கையில் சுருக்கப்பட்ட இவ்வுலகத்தின் பெரும்பான்மையான நாடுகளில் இந்த கொரோனா வைரஸ் தொற்று பரவியுள்ளது. ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’, ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ போன்ற பொன்னுரைகளை பொய்யுரைகளாக்கியுள்ளது இந்தக் கொடிய நஞ்சு. ‘தனித்து நின்று தரணி காப்போம், பிரிந்து நின்று பிரபஞ்சம் மீட்போம்’ என்ற புதுமொழிகளை உலகிற்கு உணர்த்த வேண்டிய அவசியம் அறிஞர்களுக்கும், அரசுகளுக்கும், அதிகாரிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

பல நாடுகள் தங்கள் எல்லைகளை மூடிக்கொண்டு தனிமைப்படுத்திக் கொண்டுள்ள நிலையில் அதனால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் பெரிய சவால்களாக உருவெடுத்து வருகின்றன. இந்தியாவில் ஏற்கெனவே உள்ள பொருளாதார மந்த நிலையில் இத்தகைய நடவடிக்கைகளால் மேலும் மேலும் அதன் பாதிப்புகள் நாட்டின் வளர்ச்சியை படுபாதாளத்திற்கு தள்ளிவிடும் என்பது கண்கூடாகவே தெரிகிறது. கொரோனாவின் பரவல் இந்தியாவில் அதிகரித்து வரும் நிலையில் விமான சேவைகளும், ரயில் சேவைகளும், பேருந்து சேவைகளும் ரத்து செய்யப்பட்டு சுய ஊரடங்குகளும், 144 தடைகளும் விதிக்கப்பட்டுள்ளது நாட்டில் மேலும் மேலும் வறட்சியை ஏற்படுத்தி விடும் அபாயத்தையே உணர்த்துகிறது.

திடீர் ஊரடங்குகளும், 144 தடைச் சட்டங்களும் தவிர்க்க இயலாததாக மாறிவிட்ட நிலையில் அத்தியாவசிய பொருட்கள் தவிர மற்ற பொருட்களை விற்கும் கடைகள், வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், துறைகள் அனைத்தும் 24.03.2020 மாலை 6.00 மணி முதல் முடக்கப்படும் என்ற அறிவிப்பால் வீடற்றவர்களும், அன்றாடங் காய்ச்சிகளும், தினக்கூலித் தொழிலாளர்களும், அமைப்புசாரா தொழிலாளர்களும் வாழ்வாதாரங்கள் இன்றி உடனடி பாதிப்புகளுக்கு

ஆளாகக்கூடிய நிலையில் உள்ளதை உணர்ந்து அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான அனைத்து உத்தரவாதங்களையும் ஏற்பாடுகளையும் தமிழக அரசு உடனடியாக மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

அதே வேளையில், தமிழக அரசுத் துறைகளில் பணிபுரியும் அத்தியாவசியத்துறை தவிர்த்த பெரும்பாலான ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், அரசாங்க ஊதியம் பெறும் இதர பணிப்பிரிவினரும் கொரோனாவிற்கு எதிரான அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க முன்வரவேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது. அரசாங்கத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களாகிய நாம் இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஒரு கடுமையான காலகட்டத்திலிருந்து அரசும், நாடும் வெளிவர நம்மாலான அனைத்து கடமைகளையும் செய்ய வேண்டும். அரசு ஊழியர்கள் இன்றைய சூழ்நிலையில் இரண்டுவிதமான ஒத்துழைப்பை அரசுக்கு வழங்க வேண்டியது இன்றியமையாதவையாகும்.

முதலாவதாக கொரோனா வைரஸ் மேலும் மேலும் பரவாமல் தடுக்க அரசாங்கம் சொல்லும் வழிமுறைகளை நாமும், நம் குடும்பத்தினரும் கடைபிடித்து, நண்பர்கள், உறவினர்கள், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் தவறாமல் கடைபிடிக்கிறார்களா என்பதை கண்காணித்து அவர்கள் அத்தகைய வழிமுறைகளை கடைபிடிக்க வலியுறுத்த வேண்டும். வீட்டை விட்டு வெளியில் வராமல், கும்பல் கூடாமல் சில நாட்கள் தனித்து இருக்க அனைவருக்கும் அறிவுறுத்த வேண்டும். அடிப்படை தேவைகளுக்கான பொருட்களை வாங்குவதற்காக வெளியே வருவதைத் தவிர சில நாட்களுக்கு சுயகட்டுப்பாட்டுடன் தனித்திருக்க நம்மையறிந்த அனைத்து மனிதர்களுக்கும் அலைபேசி மூலமாகவும், குறுஞ்செய்திகள் வாயிலாகவும் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக அரசு ஊழியர்களாகிய நாம் ஒவ்வொருவரும் இந்த நேரத்தில் அரசுக்கு செய்யும் நிதி உதவியால் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளான ஊரடங்கு உத்தரவு, மாவட்ட எல்லை மூடல், 144 தடை போன்றவற்றால் உடனடியாக பாதிக்கப்படக்கூடிய வீடற்றவர்கள், தினக்கூலித் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள், யாசகம் கேட்போர் போன்ற வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படக்கூடிய நபர்களின் அன்றாட உணவுத் தேவைகளுக்கும், கொரோனா தொற்று நோய்க்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள், நோயாளிகளின் உடற்கழிவுகளை, இரத்தக் கசிவுகளை அகற்றி அவர்களை பாதுகாக்கும் செவிலியர்கள் ஆகியோருக்கு தரமான பாதுகாப்பு உபகரணங்களை மருந்துகளை இதர மருத்துவ உபகரணங்களை அரசாங்கத்தால் வாங்கி வழங்கவும், நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை கொடுக்கவும் ஓரளவிற்கேனும் நம்மால் உதவிட முடியும்.

அரசு ஊழியர்கள் என்பவர்கள் சம்பளத்திற்காக வேலை செய்யும் ஊழியர்கள் என்று இல்லாமல் அவர்களுக்கு சமூக அக்கறையும், பொறுப்புணர்வும், இக்கட்டான சூழ்நிலைகளில் அரசுடன் ஒன்றிணைந்து நிற்கும் தன்மை கொண்டவர்கள் என்பதை இந்த சமூகத்திற்கு எப்போதும் உணர்த்தி வருகிறோம். அந்த உணர்வு இப்போதும் நமக்கு உள்ளது என்பதை அரசுக்கும், மக்களுக்கும் உணர்த்தும் வகையில் அரசு ஊழியர்களாகிய நாம் அனைவரும் நம்முடைய ஒருநாள் ஊதியத்தை கோவிட்-19 நோய்த் தடுப்பு நிவாரண நிதிக்காக வழங்கி நலிந்த மக்களின் மனதில் நம்பிக்கை விதை விதைப்போம்,

கோவிட்-19 நோயையும், கொரோனோ வைரஸ் தொற்றையும் கரத்தால் தனித்து நின்றும் கருத்தால் ஒன்றிணைந்தும் இவ்வுலகை விட்டு விரட்டியடிப்போம் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அனைத்து அரசு ஊழியர்களையும் கேட்டுக் கொள்கிறது.

- மாநில மையம்

ABSTRACT

Corona Virus (Covid -19) pandemic - Willingness to contribute one day's salary to the Cheif Minister's Public Relief Fund by the service Associations of Government Officials , Employees and Teachers to support the relief and preventive measures being taken by the Government - Accepted - Orders Issued

PERSONAL AND ADMINISTRATIVE REFORMS (K) DEPARTMENT

G.O (Ms) No. 41 Dated: 03.04.2020

விகாரி, பங்குனி-21

திருவள்ளுவர் ஆண்டு 2051

ORDER:

The Government is taking effective measures to control the spread of novel Corona virus pandemic. The Hon'ble Cheif Minister has made an appeal to the public , to contribute generously to the Cheif Minister's Public Relief Fund towards the measures, being taken by the Government to control the Corona Virus disease.

2. The Service Associations of Government Officials , Employees and Teachers have expressed their willingness to contribute the one day's salary to the Cheif Minister's Public Relief Fund to support the relief and preventive measures being taken by the Government to control the spread of Corona virus pandemic.

3. The Government have decided to accept the willingness of the Service Associations of Government Officials, Employees and Teachers and direct that the voluntary contributions of one day's salary / more than one day's salary of the Government Officials, Employees and Teachers to the "Cheif Minister's Public Relief Fund " towards the relief and preventive measures being taken by the Government to control the spread of Corona virus pandemic, be deducted from their pay bill for the month of April/ May 2020

4. The following procedures be followed to facilitate the contributions made by the Government Officials, Employees and Teachers :-

i. Any Official / Employee / Teacher willing to voluntarily contribute one day's salary or more than one day's salary to the "Cheif Minister's Public Relief Fund" , shall give his/her consent in writing to the concerned Drawing and Disturbing Officer.

ii. The Drawing and Disturbing Officers shall make use of the IFHRMS application for calculating one day's / more than one day's salary in the pay bill for the month of April / May 2020. This amount shall be deducted on the basis of gross amount of salary for the month of April / May 2020 and credited directly to the "**Cheif Minister's Public Relief Fund**" Savings Bank Account maintained at Indian Overseas Bank, Secretariat Branch , Chennai -9 ( SB A/c No. 117201000000070 , IFS Code IQBA0001172 , CMPRF PAN No.AAAGC0038F) on the due date of disbursement of salary. The Drawing and Disturbing Officers shall inform the District level Officers and Heads of Departments of the Electronic Clearing System (ECS) mode of deduction from the monthly pay bill and the amount credited to the Cheif Minister's Public Relief Fund account along with list of employees from whose salaries , the contributions are deducted.

iii. If any of the offices do not have Electronic Clearing System (ECS) mode of payment for salary of the staff members, the Pay Drawing and Disturbing Officers shall obtain a consolidated crossed Cheque or Demand Draft in favour of the "Cheif Minister's Public Relief Fund". The Cheque / Demand Draft along with the statement of Names , Designation and the name of the office of the contributing employees shall be sent to the District level Nodal Officer of that Department nominated by the concerned Heads of Department. The Nodal Officer , in turn, will send the Cheques / Demand Drafts , so received along with the statement of particulars to the Deputy Secretary to Government and Treasurer, Cheif Minister's Public Relief Fund, Finance Department, Secretariat , Chennai-9 , under intimation to the concerned Heads of Department. The Heads of Department will monitor the collection and forwarding of contributions along with the statements to the Cheif Minister's Public Relief Fund. Heads of Department shall nominate an officer of his Department in each District as Nodal Officer.

iv. In respect of Offices of Heads of Department and the departments of Secretariat, the same procedure shall be followed and the Drawing and Disturbing Officer shall send the details of Electronic Clearing System (ECS) / Cheque / Demand Draft and statement of particulars direct to the Cheif Minister's Public Relief Fund.

v. In respect of Self-drawing Officers , the same procedure outlined above shall be followed.

vi. The Drawing and Disturbing Officers shall allow tax exemption to the extent of 100% ( under section 80(G) of Income Tax Act) on the contribution to the Cheif Minister's Public Relief Fund. Employees who have contributed to the Cheif Minister's Public Relief Fund other than salary deduction may get receipt for such contribution from Cheif Minister's Public Relief Fund , to avail tax exemption.

vii Any employee willing to contribute more than one day's salary may also be permitted to do so , following the procedure under item (i) above.

viii.These orders may be applied mutatis mutandis to all employees of Local Bodies , Universities , Board and Corporations , Aided Educational Institutions and other institutions receiving grants from the Government and also to the employees drawing Consolidated Pay , based on the willingness obtained from the employees.

5. The Drawing and Disturbing Officers shall ensure that the contributions are made purely voluntarily and the above procedures have been evolved only in order to facilitate the request made by the Service Associations of Government Officials , Employees and Teachers for contribution to the Cheif Minister's Public Relief Fund.

6. This order issues with the concurrence of the Finance Department vide its U.O. No.14922/CMPRF/2020-1 , dated 01.04.2020

(BY ORDER OF THE GOVERNOR)

K.SHANMUGAM
CHIEF SECRETARY TO GOVERNMENT

கோவிட் 19 தடுப்பு நடவடிக்கைகளில் தங்களின் உயிரையும் துச்சமென மதித்து, நோய் பாதிக்கப்பட்டோரை அந்த பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும் உன்னதப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும் அனைத்து சுகாதாரதூய்மை ஊழியர்களுக்கும் மக்களின் அத்தியாவசியத் தேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத்துறைப் பணியாளர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுதலும் நெஞ்சார்ந்த நன்றியும்

ஆசிரியர்கள்அரசு ஊழியர்கள் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தங்களது ஒருநாள் ஊதியத்தினை வழங்க முடிவு ஜாக்டோ ஜியோ அறிவிப்பு

# ஸ்பெயின் மீது பிரிட்டன் போர் தொடுக்க காரணமாக அமைந்த ஜென்கின்சின் "காது" (வரலாற்று நிகழ்வு ஏப்ரல் 9)

*1731 - "ஜென்கின்சின் காதுப் போர்" என்று அழைக்கப்படுகிற போர் ஏற்படக் காரணமாக அமைந்த ராபர்ட் ஜென்கின்ஸ் என்ற மாலுமியின் காதை வெட்டிய நிகழ்வு நடந்தது. 1701இல் நடைபெற்ற ஸ்பானிய வாரிசுரிமைப் போரின் இறுதியில் ஏற்பட்ட உட்ரெக்ட் ஒப்பந்தம் மேற்கிந்தியத் தீவுகளில் இருந்த ஸ்பானியக் குடியேற்றங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் அடிமைகளையும் ஆண்டுக்கு 500 டன் சரக்குகளையும் முப்பதாண்டுகளுக்கு விற்பனை செய்யும் உரிமையை பிரிட்டனுக்கு வழங்கியது. பிரிட்டனுக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் தொடர்ந்து புதிய புதிய போர்கள் ஏற்பட்டுக்கொண்டே இருந்த நிலையில் 1729இல் ஏற்பட்ட செவில்லி ஒப்பந்தம் பிரிட்டன் கப்பல்களைச் சோதனையிடும் உரிமையை ஸ்பெயின் கடற்படைக்கு வழங்கியது.*

*சரக்குகள் கொண்டு செல்லும் உரிமையை பிரிட்டன் வணிகர்கள் தவறாகப் பயன்படுத்துவதாக ஸ்பானிய கடற்படைக்குச் சந்தேகம் இருந்துகொண்டே இருந்ததால் பிரிட்டனின் வணிகக் கப்பல்களில் ஏறிச் சோதனையிட்டதுடன், அவ்வப்போது சரக்குகளைப் பறிமுதலும் செய்தனர். கடத்தல் பொருட்கள் இருப்பதாக மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ராபர்ட் ஜென்கின்சின் கப்பலில் ஏறிச் சோதனையிட்ட ஸ்பெயின் கடற்படையின் ஜீவான், பேண்டினோ என்ற தளபதி ஜென்கின்சின் காதை வெட்டிக் கையில் கொடுத்து இனிமேலும் இப்படி நடந்தால் உங்கள் மன்னருக்கும் இதைத்தான் செய்வேன் என்று போய்ச் சொல் என்று கூறினாராம்.*

*1731 ஜுன் 11 அன்று பிரிட்டன் வந்தடைந்த ஜென்கின்ஸ், மன்னரைச் சந்தித்து நடந்தவற்றைப் புகாராகக் கூறினார். அப்பகுதிக்குப் பொறுப்பான பிரபுவை விசாரிக்க மன்னர் உத்தரவிட்டாலும் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லும் வணிகர்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வரவே பிரிட்டன் பாராளுமன்றம் 1738இல் ஜென்கின்சை அழைத்து விசாரித்து. அப்போது ஒரு ஜாடியில் பாதுகாத்து வைத்திருந்த காதை அவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விளக்கியதைத் தொடர்ந்து 1739இல் ஸ்பெயின்மீது பிரிட்டன் போர் தொடுத்து 1748 வரை நடைபெற்ற இப்போர் அப்பகுதியில் பிரிட்டனுக்கு இருந்த அதிகாரங்கள் குறையக் காரணமாக அமைந்தது.*

**. மு.பாஸ்கரன்**

# மக்களுக்கு தேவை வல்லரசா? நல்லரசா?

**கொ**ரானா எனும் கொடிய வைரஸ் உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. அனைத்து நாடுகளும் அஞ்சு நடுங்குகின்றன. நான் தான் உலகத்தில் பெரியவன் என்னிடம் அணு ஆயுதங்கள் இருக்கிறது என்று போட்டி போட்டுக்கொண்டு அணு ஆயுத சோதனை செய்து தன்னை பெரிய ஆளாக காட்டிக்கொண்ட நாடுகளும் ஏன் நம் இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் அணுவளவும் சிறிதான வைரஸ்க்கு பயந்து ஓடி ஒளிந்து கொண்டன. தன் நாட்டுமக்கள் கொத்துக் கொத்தாக சாவதை பார்த்து செய்வதறியாமல் விழிபிதுங்கி நிற்கின்றன.

பொதுவாக இரண்டு நாட்டு அதிபர்கள் சந்தித்துக் கொண்டால் தன் நாட்டின் இராணுவ பலத்தை வெளிக்காட்டிக் கொள்வதிலும் இராணுவ அணிவகுப்பு நடத்துவதிலும் தன்னை பெருமைப்படுத்திக் கொள்வதிலும் அக்கறை காட்டுகின்றன. நாட்டின் குடிமக்களுக்கு அத்தியாவசிய தேவைகளான கல்வி, மருத்துவம் ஆகியவை அனைத்து மக்களுக்கும் இலவசமாக அளிக்கவேண்டும் என்பதை விட இவைகளை உலக சந்தையில் விற்பனை செய்யக்கூடிய வணிகமாக மாறிவிட்டது எனலாம்.

உலகத்தையே தனது குடையின் கீழ் கொண்டுவரும் பேராசை மன்னர்கள் காலத்திலிருந்தே அலெக்சாண்டர், செங்கிஸ்கான் போன்றோர் மட்டுமல்ல 18ம், 19ம் நூற்றாண்டுகளிலிருந்து பிரிட்டிஷ்காரர்களும் 20 ம் நூற்றாண்டில் முதல் பாதியில் ஹிட்லரும் பிற்பாதியில் இரண்டு மிகப்பெரிய வல்லரசுகளாக அமெரிக்காவும் ரஷ்யாவும் நின்றன. நாடுபிடிக்கும் ஆசைதான் முதல் உலகப்போர் மற்றும் இரண்டாம் உலகப்போருக்கும் வித்திட்டது மட்டுமல்லாமல் அதன் விளைவு உலக நாடுகள் அனைத்தும் தனது நாட்டின் இராணுவ பலத்தை அதிகரிக்க நாட்டின் மொத்த வருவாயில் பெரும்பங்கினை செலவிட்டு உலக அமைதியை சீர்குலைத்தது. இப்படி தனது இராணுவ பலத்தை பரிசோதித்துக் கொண்டிருக்கும் நாடுகளில் மிகப்பெரிய வல்லரசாக தன்னை மார்தட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் வல்லரசு பிம்பத்தை உடைத்தெறிந்தது இந்தக் கொரானா.

தனது குடிமக்களின் அத்தியாவசிய தேவைகளின்மேல் கவனம் செலுத்தாத வல்லரசுகள் இராணுவத்திற்கு செலவு செய்ததை விட மருத்துவம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றிற்கு செலவினை குறைத்ததன் பலனே தற்போதய கட்டுக்கடங்காத உலக நெருக்கடிநிலை. பிடல் கேஸ்ட்ரோ, சேகுவேரா போன்ற இடதுசாரி சிந்தனையாளர்களின் நோக்கம் நாடு பிடிப்பதில் இல்லாமல் அடித்தட்டு மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களின் அத்தியாவசிய தேவைகளான கல்வி, மருத்துவம், மனிதவளம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நல்லரசாக இருந்தது. அதன் பயனே இன்று உலகஅளவில் மருத்துவத்தில் சிறந்து விளங்குகிறது.

அந்த சேவையை தனது நாட்டிற்கு மட்டுமல்லாமல் தனது மருத்துவக் குழுவை கொரானாவால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி அவசரகால உதவிகரத்தை நீட்டியுள்ளது. ஒரு நாட்டின் ஆயுதங்களுக்கு செய்யப்படும் செலவானது ஒரு போதும் ஆக்கத்தை தராது. அழிவை மட்டுமே தரும். இதனால் உலக நாடுகள் இச்சுழலில் கற்றுக்கொள்ளவேண்டிய முக்கியமான பாடம் என்னவென்றால் அழிவை தரும் ஆயுதங்களுக்கு செலவிடுவதை விட ஆக்கத்தை தரும் மனிதகுலம் மேம்பாட்டிற்கு செலவிட்டால் இது போன்ற நெருக்கடியான சூழலில் தன் நாட்டை காப்பது மட்டுமல்லாமல் மற்ற நாடுகளுக்கும் கியூபாவைப் போல் உதவிகரம் நீட்டமுடியும். எனவே மனிதகுலத்திற்குத் தேவை ஆயுதம் தாங்கிய வல்லரசு இல்லை, நல்லரசுதான் தேவை.

- **தெ.வாசுகி**

# மரணத்தை மனிதத்தால் வெல்வோம் வாருங்கள்!

அன்பிற்கினிய தோழமைகளே! நிர்வாகிகளே!

இன்று உலகையே பின்னோக்கி சுற்ற வைத்திருக்கிறது கொரோனா என்ற கண்ணுக்குத் தெரியாத வைரஸ். ஊரடங்கு உத்தரவு, 144 தடை என்று அரசால் மேற்கொளள்ப்பட்டுள்ள நடவடிக்கைகள் எந்த அளவுக்கு இந்த வைரஸை கட்டுப்படுத்தவோ இல்லாமல் ஆக்கவோ செய்யும் என்பது தெரியவில்லை.

நோய் தீர்க்கும் மருந்தோ நோய் தடுக்கும் மருந்தோ இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் நான் பெரியவனா? நீ பெரியவனா? என்று மல்லுகட்டி நின்ற வல்லரசுகள் இன்று கண்ணுக்குப் புலப்படாத வைரஸைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றன. மக்களின் ஆரோக்கியத்திற்காக செலவிட மறுத்து அணு ஆயுதங்களை வாங்கிக் குவித்த பேரரசுகள் இன்று மருத்தவ மனைகளில் வந்து குவியும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவக் கருவிகள் இல்லாமல் விழிபிதுங்கி நிற்கின்றன. செவ்வாய் கிரகத்தில் குடியேறப் போகிறோம் என்று கூவிய மனித இனம் இன்று பூமியில் வாழ வழியின்றி குறுகி நிற்கிறது. நாட்டையும், நாட்டின் தலைவர்களையம் பாதுகாக்க குண்டு துளைக்காத வாகனங்களை உற்பத்தி செய்த மனித ஆற்றல் ஒரு தொற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க முடியாமல் கொத்து கொத்தாய் செத்து வீழ்கிறது.

இந்த உலகைப் படைத்ததாகவும், மக்களை காப்பதாகவும் நம்பப்பட்ட கடவுள்கள் எல்லாம் தங்கள் இருப்பிடத்தை நன்றாக பூட்டிக்கொண்டு கோவில், தேவாலயம், மசூதிகளுக்குள்ளேயே பாதுகாப்பாக அடைபட்டு விட்டனர். என் மதமே பெரிது என்று எதிரெதிர் நின்று தர்க்கம் பேசிய எந்த மதத்தினரையும் விட்டுவைக்கவில்லை கொரோனா வைரஸ். ஆன்மிகம் தான் மனிதனை வாழ்விக்கிறது, அறிவியல் கெடுக்கிறது என்று ஆருடம் சொன்ன ஆன்மிக வழிகாட்டிகள் எல்லோருடைய முகத்தினையும் இன்று என்-95 முகக் கவசம் மூடியிருக்கிறது. அசாத்தியமான சக்தி வாய்ந்த சமஸ்கிருதம், அரபி, ஹீப்ரூ மொழிகளுக்கு கடவுளே செவிசாய்ப்பார் என்று பிரசங்கம் செய்தவர்கள் எல்லாம் கொரோனா என்ற ஒற்றை ஆங்கிலச் சொல்லுக்கு பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர். என் மதம், என் கடவுள், என் மக்கள் என வீர வசனம் பேசியவர்கள் எல்லாம் இன்று வீதிகளில் காணவில்லை. மக்கள் சேவையே மகேசன் சேவை அதுவே என் லட்சியம் என்று மேடைதோறும் பேசி பதவி சுகம் அனுபவித்தவர்கள் பலர் தங்களைத் தாங்களே இருட்டடிப்பு செய்துகொண்டுவிட்டனர். 2020 ஆம் ஆண்டு ஆஹா ஓஹோன்னு இருக்கும் என்று பஞ்சாங்கம் பார்த்து குறி சொன்ன புரோகிதமும், 12 ராசிக்கும் கட்டம் போட்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இரட்டிப்பாகும் என கதையளந்த சோதிடமும் இப்போது எந்தக்கட்டத்திற்குள் ஒளிந்து கொண்டுள்ளன என தேடும் நிலைதான் ஏற்பட்டுள்ளது. பாலபிஷேகம் முதல் கட்அவுட் வரை வானளவு உயர்ந்த சூப்பர் ஹீரோக்களும், பஞ்ச் டயலாக் பேசியே பஞ்சத்தை ஓட்டிவிடுவேன் என்று வளர்ந்த நாயகர்களும் களத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை காணவில்லை.


அமெரிக்க ஜனாதிபதி சீனாவின் மேல் கடுங்கோபத்தில் இருந்தாலும் வேறு வழியின்றி உதவி கேட்கிறார். இந்தியப் பிரதமர் நாட்டு மக்களைப்பார்த்து கையெடுத்துக் கும்பிடுகிறார். கனடா நாட்டு பிரதமரின் மனைவி படுக்கையில் இருந்தவாறே கண்ணீர்மல்க பேட்டியளிக்கிறார். பிரான்ஸ் ஜனாதிபதிக்கு கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு விட்டதற்காக அதிர்ச்சியடைகிறார். இங்கிலாந்து இளவரசர் கரோனோ தொற்றுநோய்க்கு ஆட்பட்டு தனிமையில் கிடக்கிறார். இத்தாலி பிரதமர் இறந்தவர்களை அடக்கம் செய்யக்கூட எங்களிடத்தில் ஆட்கள் இல்லை என்று பொது இடத்தில்

கதறுகிறார். உலகை ஆளும் இத்தனை பெரிய ஜாம்பவான்களையே கதற வைத்துள்ள இந்தக் கொடிய கொரோனா வைரஸை எதிர்த்து உண்மையில் இன்று களத்தில் நிற்பவர்கள் யார்?

நாடே பஞ்சத்தில் இருக்கும் போது கொஞ்சம்கூட நெஞ்சில் ஈரமின்றி ஊதிய ஊயர்வுக்காக போராடுகிறார்கள் என்று அமைச்சர்களால், சில சமூக வலைத்தள வாய்ப்பேச்சு வீரர்களால் கொச்சைப்படுத்தப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டும், பிற மாவட்டங்களுக்கு மாறுதல் செய்யப்பட்டும் பழிவாங்கப்பட்ட மருத்துவர்களும், அடிப்படை ஊழியர்களின் சம்பளத்தைவிட குறைவான அடிமாட்டுச் சம்பளத்திற்கு எடுக்கப்பட்டு, எட்டாயிரம் ரூபாய் சம்பளம் போதாது என போராடியதற்காக அரசின் இரும்புக் கரங்களால் நசுக்கப்பட்ட செவிலியர்களும், எப்போதும் சக மனிதனால் கூட மதிக்கப்படாமல், சமூகத்தால் ஒதுக்கப்பட்டும், கேவலப்படுத்தப்பட்டும் வரும் துப்புரவுப் பணியாளர்களும் மருத்துவத்துறை அடிப்படை பணியாளர்களும்தான் இன்று கொரோனா வைரஸை எதிர்த்து களத்தில் இருக்கிறார்கள்.

இவர்கள் மட்டுமல்ல ஊரடங்கு உத்தரவை, 144 தடையை அதன் உள்ளார்ந்த அர்த்தத்தோடு நிறைவேற்ற சாலைகளில் நின்று சமூகப் பரவலை தடுக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள காவல்துறையினரும். தனிமைப்படுத்தப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கும், தினசரி வேலைவாய்ப்பினை இழந்து வாழ்வாதாரமின்றி தவிக்கும் கூலித் தொழிலாளர்கள், சாலையோர மக்கள் போன்றோருக்கு உணவு சமைத்து விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அங்கன்வாடி, சத்துணவு மற்றும் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி துறையினர், சமூகநலத்துறை, கூட்டுறவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை, மருத்துவ தொழில்நுட்பப் பிரிவு ஊழியர்களும், கரோனா வைரஸின் வீரியத்தை அறிந்திருந்த போதிலும், உயிரை பணயம் வைத்து செய்து வரும் மக்கள் சேவை மகத்தானது, போற்றத்தக்கது.

நாடே விழிபிதுங்கி நிற்கும் நேரத்தில் பொறுப்புணர்ந்த அரசு ஊழியர்களாகிய நாமும் அதற்கு துணை நிற்கவேண்டும். அரசு ஊழியர்கள் என்பவர்கள் உரிமைக்காக போராடுபவர்கள் மட்டுமல்ல, இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் பணியாற்றுபவர்கள் என்ற பெயரை இப்போது நிலைநிறுத்த வேண்டியது நம் பொறுப்பும் கடமையும் ஆகும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில, மாவட்ட, வட்ட நிர்வாகிகள் அனைவரும் தங்கள் பகுதியில் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் தினசரி கூலித் தொழிலாளர்கள், ஆதரவற்றோர், முதியோர்கள் போன்றவர்களுக்கு உதவும் பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு உணவோ, மருந்து பொருட்களோ வழங்கி உதவிட வேண்டும். மேலும் தங்கள் பகுதியில் நோய்தொற்று பரவாமல் தேவையான பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும். கொரோனா வைரஸின் தன்மைகளையும் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொரு மனிதரும் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை தங்கள் பகுதிகளில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான முறையில் பிரச்சாரம் செய்து அவர்களிடம் கொரோனா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சமூக விலகலை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் அதனால் கொரோனாவை பரவாமல் நாம் எப்படி தடுக்கலாம் என்ற விளக்கத்தையும் உங்கள் பகுதியில் உள்ள மக்களிடம் உணர்த்த வேண்டும். ஏதோ அரசாங்கம் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து விட்டது. நாமும் 21 நாட்கள் வீட்டில் இருந்து நம்மையும் நம் குடும்பத்தையும் காத்துக்கொள்ளலாம் என்று எண்ணாமல் இன்று மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மை பணியாளர்கள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவ தொழில்நுட்ப அதிகாரிகள், காவல்துறையினர், அங்கன்வாடி ஊழியர்கள், சத்துணவு மற்றும் வருவாய்த் ஊழியர்கள், ஊரக வளர்ச்சித்துறை, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி துறையினர், சமூகநலத்துறை, கூட்டுறவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை இன்னபிற அத்தியாவசியத் துறை ஊழியர்கள் போன்றோர் தினமும் வீட்டை விட்டு வெளியில் வந்து மக்கள் பணியாற்றும் நிலையில், கற்றுணர்ந்த அரசு ஊழியர்களாகிய, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பல்வேறு பொறுப்புகளில் உள்ள நிர்வாகிகளாகிய நாம் அனைவரும் நமக்கான சமூக பொறுப்பை உணர்ந்து மக்கள் பணியாற்ற முன் வருவோம். எத்தனை ஆயிரம் ஆட்கொல்லி வைரஸ்கள், நோய்கள் மனிதர்களை கொல்ல வந்தால் அதனை மனிதத்தால் வெல்ல முடியும் என்பதை இந்நேரத்தில் நாம் அகிலத்திற்கு உணர்த்துவோம். கரோனா குறித்த நம்முடைய சேவை களோ, உதவிகளோ சிறிதாக இருக்கலாம் ஆனால் அவை கரோனா நோய் தொற்று ஒழிப்புக்காக இந்த தேசம் எடுத்து வரும் நடவடிக்கைகளில் மதிப்பு மிக்கவை என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம். ❖



# வரலாறு படைத்த அன்றைய தெலுங்கானா போராட்டம்

தெலுங்கானா விவசாயிகளின் புரட்சிப் போராட்ட அனுபவங்கள் பாட்டாளி மக்களின் விடுதலை இயக்கங்களுக்கு எண்ணற்ற பாடங்களைக் கற்றுத்தரும் பலவிதக் கண்ணோட்டங்களிலிருந்துப் படித்தறிய வேண்டும். அவ்வியக்கத்தில் இருந்த பிரச்சனைகள், போராட்ட வடிவங்கள், நடைமுறை தந்திரங்கள் இருசாராரின் வலிமையையும், பலவீனங்களையும் கணக்கிடுதல் ஆகிய பல விஷயங்களையும் ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

*எம்.அனுமந்தராவ் - 1953ல்*
*(பிரஜா சக்தி நாளிதழ் ஆசிரியர்)*

இந்தியா விடுதலை அடைந்து அரை நூற்றாண்டு காலம் முடிந்து விட்டது. விடுதலைக்கான போராட்டத்தையொட்டிய நிலபிரபுத்துவ அமைப்பை தகர்க்க ஏராளமான மக்கள் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. வரலாற்று ஆசிரியர்களால் மறைக்கப்பட்ட தியாகிகள் எண்ணற்றவர்கள். நிலபிரபுக்களின் கொடுமையான அடக்குமுறைகளை சந்தித்து, அதை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தி தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த ஆண்களும், பெண்களும் எண்ணற்றோர்.

இந்தியாவில் விவசாயிகளின் போராட்டங்களில் மிகவும் முக்கியமான இடம் தெலுங்கானா போராட்டம். நிலத்திற்காகவும், நிலப்பிரபுக்களும், அரசு அதிகாரிகளும் கட்டாயப்படுத்தி உழைப்பை சுரண்டியதிலிருந்து விடுதலை பெறவும் அடிமைத்தளைகளையும் உடைத்தெறிவதற்காகவும்,தெலுங்கானா மக்கள் எழுச்சி மிகுந்த, தியாகம் நிறைந்த போராட்டம் நடத்தி வரலாற்றில் நீங்கா இடம் பிடித்து விட்டனர். தெலுங்கானா வீரத்தின் விளைநிலம் என்றால் மிகையாகாது. நிஜாமின் கொடூரமான செயல்களை நினைக்கவே அச்சமூட்டுவதாகவும், அநாகரிகமானதாகவும் இருந்ததுடன், அதற்கு கொஞ்சமும் சளைக்காத காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மத்திய அரசின் ராணுவத்தை அனுப்பி மக்களை சித்திரவதை செய்த விதம் நாகரிக சமூகத்தை தலைக்குனியச் செய்யும். பெண்களை அவர்கள் செய்த சித்திரவதைகளை அப்பெண்கள் தாங்கிக் கொண்டதும், எதிரிகளை துணிச்சலுடன் எதிர்கொண்டதும் மெய் சிலிர்க்க வைக்கின்றன. நாம் நினைத்துக்கூட பார்க்க இயலாத கொடுமைகளை ஹைதராபாதின் நிஜாம் மன்னனின் குண்டர்கள் செய்திருக்கின்றனர். அப்படிப்பட்ட அரக்கர்களையும் ஒன்றுபட்ட மக்கள் சக்தியால் எதிர்கொள்ள முடியும் என்பதற்கு ஒரு மிகச்சிறந்து முன்னுதாரணம் தெலுங்கானா போராட்டம்.

### வரலாற்றுப் பின்னணி

ஆங்கிலேயர் ஆட்சியில் ராஜாக்கள், நவாப்புகள் ஆட்சி செய்த மாகாணங்கள் உண்டு. ஹைதாராபாத் அன்று நிஜாம்களின் ஆதிக்கத்தில் இருந்தது. நிஜாமுக்கு சொந்தமான நிலம் மாகாணம் முழுவதும் இருந்தது. நிஜாமைத் தவிர, நிலவரி வசூல் செய்வதில் முக்கிய பங்காற்றிய தேஷ்முக்குகளும் தேசாய்களும் ஏராளமான நிலத்திற்கு உரிமையாளர்களாக இருந்தனர். சாகுபடிக்கான நிலங்களில் 60 சதவீதம் பெரும் நிலப்பிரபுக்களுக்கு சொந்தமாக இருந்தது. நில உரிமையை வழங்காமல் நில வரியை மட்டும் சாகுபடியாளர்கள் கட்ட வேண்டுமென நில பிரபுக்கள் வலியுறுத்தினர். சலவைத் தொழிலாளி, முடிதிருத்துபவர், மரவேலை செய்பவர் என அனைவரும் நில பிரபுக்களுக்கு கூலி ஏதும் இன்றி கட்டாய உழைப்பு (வெட்டி) செலுத்த வேண்டும். இப்படி வேலை செய்வோர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். வாங்கிய கடனை திருப்ப இயலாமல் அடிமைகள் போல நடத்தப்பட்டனர். விவசாயிகளையும், கூலித்தொழிலாளர்களையும் அடக்கி ஒடுக்க நிஜாம்கள் ஒற்றர்படை வைத்திருந்தனர். நிலப்பிரபுக்களின் நிலத்தில் வேலையை முடித்த பின்பே தங்கள் நிலத்தில்

சிறுவிவசாயிகள் வேலை செய்ய முடியும். இல்லையெனில் கடுமையான தண்டனை வழங்கப்படும்.

பெண்களின் நிலை பற்றி கேட்கவே வேண்டாம். நல்ல துணி உடுத்திக் கொள்ளக் கூடாது. தலையில் பூ வைத்துக் கொள்ளக்கூடாது. சாப்பிட்டுக்கொண்டிருந்தால் கூட துரை அல்லது துரைசாணி அழைத்தால், சாப்பிடுவதை நிறுத்திவிட்டு ஓட வேண்டும். நிலப்பிரபுவின் நிலத்தில் வேலை செய்யும் போது குழந்தைக்கு பாலூட்டக்கூட விட மாட்டார்கள் இந்தப் பெண்கள் மீது நிலப்பிரபுக்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. நிலப்பிரபுக்களின் பாலியல் தாக்குதல்களுக்கு ஆளாகிய விவசாயப் பெண்கள் பட்ட துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

### மாதர் அமைப்புகள்

பல கொடுமைகள் அனுபவித்ததன் காரணமாக, நில பிரபுக்களை எதிர்த்து பெண்கள் போராடினர். 1916லிருந்தே மகளிர் அமைப்புகள் ஆந்திராவில் செயல்படத்துவங்கின. நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் பெண்கள் வீட்டிற்கு வெளியே செல்ல பெரும் தடையாக இருந்தது. இருப்பினும் பெண் கல்வி, விபச்சார ஒழிப்பு, பர்தா முறை ஒழிப்பு, விதவை மறுமணம் என்ற பல்வேறு பிரச்சனைகளை பெண்கள் விவாதித்தனர். மகளிர் அமைப்புகள் தோன்றிய தால் பெண்கள் பொது வாழ்வில் ஈடுபட ஊக்கம் கிடைத்தது. 1936ல் கிருஷ்ணா மாவட்டத்தில் சந்திரா ராஜேஸ்வரராவ் தலைமையில் அமைக்கப்பட்ட மாதர் சங்கம் விவசாயப் பெண்களை திரட்டும் பணியை செய்தது. நிஜாமின் கொடுமைகளுக்கெதிரான பிரச்சாரத்தை கொண்டு சென்றனர். ஆனால் 1944-ல் இதன் செயல்பாடு நின்றுவிட்டது. ஆந்திர மகாசபை ஒரு வெகுஜன அமைப்பாக செயல்பட்டது. உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சீட்டு வழங்கப்பட்டது. இதனால் அதற்கு ‘சீட்டு சங்கம்’ என்ற பெரும் உண்டு. ‘சீட்டு” இருந்தால் வெட்டி வேலை செய்ய மறுக்கலாம். வரி வசூல் செய்வோரை தண்டிக்கலாம் என்ற நிலை இருந்தது. சீட்டு இருந்ததால் ‘முந்திரை’ என்ற இடத்தில் லம்பாடிகளுக்கு சொந்தமான நிலத்தை சட்டவிரோதமாக நிலபிரபுக்கள் எடுத்துக் கொள்வதை தடுக்கமுடிந்தது. இதன்பின் கற்கள், கம்புகள், என போராட்ட வடிவம் மாறியது. பெண்கள் எதிரிகளை தாக்குவதற்கு கம்புகளுடன், மிளகாய் பொடியையும் பயன்படுத்தினர். நிலத்தில் பயிர் செய்யும் உரிமை போராட்டம், ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் ஆரம்ப கட்டமாக விளங்கியது.

### ஆயுதம் தாங்கிய போராட்டம்

1946 நவம்பரில் கிராமங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆயுதம் தாங்கியப் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. நிஜாம் அரசு நிலப்பிரபுக்களுக்கு சாதகமாக செயல்பட்டது.

1947ல் இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் விவசாயிகளின் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. நிஜாம் இந்திய யூனியனுடன் இணைய மறுத்தது புதிய சூழலை உருவாக்கியது. இதையொட்டி கிராம பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டன். ஒவ்வொரு குழுவிலும் மருத்துவர்கள், அரசியல் பிரச்சாரம் செய்வோரும் இருந்தனர். காவல்நிலையங்களிலிருந்தும், நிலப்பிரபுக்கள் வீடுகளிலிருந்தும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கொரில்லா தாக்குதல் நடத்தப்பட்டது. 4000 கிராமங்களில் கிராம ராஜ்யம் அமைக்கப்பட்டு ‘வெட்டி” முறை ஒழிக்கப் பட்டது. திருப்பித்தரப்படாத கடன்கள் ரத்து செய்யப்பட்டன. நிலங்கள் குத்தகைதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

தெலுங்கானா போராட்டம் விவசாயிகளுக்கு நிறைய நன்மைகளைப் பெற்றுத்தந்தது. நிலம் விநியோகத்தின் மூலம் நிலம் கிடைத்தவர்கள் அதற்கு சொந்தக்காரர்களாகி விட்டனர். அதை உறுதி செய்யும் வகையில் குத்தகைதாரர் சட்டம் வந்தது. விவசாயிகளின் வாழ்க்கையில் இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டம் பெண்களை நான்கு சுவர்களுக்கு வெளியே கொணர்ந்தது.

போராட்டம் முடிந்தவுடன் பெண்கள் தத்தம் வீடுகளுக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டனர். போராட்டத்தின்போது கையில் ஆயுதம் ஏந்திவிட்டு, இப்போது வீட்டில் உட்கார வேண்டுமா என்று கேட்ட பெண்களும் உண்டு. அந்த அளவுக்கு இயக்கத்தில் அர்பணித்தப் பெண்களின் வாழ்க்கை வரலாறு படித்துப் பயன் பெற வேண்டிய ஒன்றாகும். அவர்களின் தியாகத்தை என்றென்றும் நினைவு கூர்வோம்

- **இரா.மங்களபாண்டியன்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் சார்பில் தலைவர் மு.அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் சார்பில் வெளியிடப்பட்ட ஊடக செய்தி

## உங்கள் சேனைகளை அவமானப்படுத்தி உங்கள் முகத்தில் நீங்களே கரி பூசிக்கொள்ளாதீர்கள்!

## மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஆந்திரா, தெலுங்கானா மாநில அரசுகளுக்கு

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வேண்டுகோள்

உலகம் முழுவதிலும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் இன்று தலையாய பிரச்சனையாக மாறியுள்ள கொரோனா தொற்று உலகப் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்துள்ளது. பல நாடுகள் தங்கள் எல்லைகளை மூடிக்கொண்டு தனிமைப்படுத்திக் கொண்டுள்ள நிலையில், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் பெரிய சவால்களாக உருவெடுத்து வருகின்றன. இந்தியாவில் ஏற்கெனவே உள்ள பொருளாதார மந்த நிலையில் 21 நாள் ஊரடங்கு மற்றும் 144 தடை சட்டங்களால் அதன் பாதிப்புகள் நாட்டின் வளர்ச்சியை படுபாதாளத்திற்கு தள்ளிவிடும் என்பது கண்கூடாகவே தெரிகிறது.

திடீர் ஊரடங்கு காரணமாக இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் நிர்வாகத்தை நடத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. கொரோனாவின் பாதிப்பிலிருந்து மீண்டுவர இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் உள்ள பெரும் வணிகர்கள், செல்வந்தர்கள், முக்கியப் பிரமுகர்கள் அந்தந்த மாநிலங்களுக்கு கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தங்களால் இயன்ற நிதி உதவிகளை அளித்து வருகிறார்கள். இதே நிலைதான் எல்லா மாநிலங்களிலும் உள்ளது. தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என அரசில் பணிபுரியும் அனைத்து வகை ஊழியர்களும் தங்கள் ஒருநாள் ஊதியத்தை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவுகளுக்காக வழங்க முன் வந்துள்ளனர்.

மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு தர வேண்டிய ஜிஎஸ்டி நிலுவைத் தொகை, கொரோனா நிவாரணத் தொகை போன்றவற்றை இன்னும் வழங்காத நிலையில் மாநிலங்கள் இந்த நிலைமையை சிரமப்பட்டு சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளதை நாட்டு மக்களும், அரசு ஊழியர்களும் அறிவர். ஆனால் மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஆந்திரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களில் காவல் துறையினர், மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறையினர் தவிர்த்து, ஓய்வூதியதாரர்கள் உட்பட மற்றவர்களுக்கு 30 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை மார்ச் 2020க்கான சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்திருக்கக்கூடிய செயலானது மிகவும் துரதிருஷ்டவசமானது.

இந்தியாவில் தாங்கள் பெறும் சம்பளத்திற்கு ஒழுங்காக வரி செலுத்தக்கூடியவர்கள் அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களும் அதிகாரிகளும் மட்டுமே. தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் அவர்களின் ஊதியங்கள் மீதும் உரிமைகள் மீதும் மிகப்பெரிய அடிகள் தொடர்ந்து விழுந்து கொண்டிருக்கின்றன. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வரும் ஊதியமாற்றத்திலும் அரசு ஊழியர்கள் பெற்றதைவிட இழந்ததே அதிகம். பல மாநிலங்களில் மாநில அரசு ஊழியர்களுக்கு 1.1.2016ஆம் தேதி முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய மாற்ற நிலுவைகள் அதிகபட்சமாக 21 மாதங்கள் வரை

மறுக்கப்பட்டிருக்கின்றன. சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாடு மறுக்கப்பட்டுள்ள பிரிவினராக இன்று மாநில அரசு ஊழியர்கள் தங்களுக்கு கிடைக்கும் ஊதியங்களைக் கொண்டு குடும்பத்தை நடத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியங்களிலேயே முரண்பாடுகள் உள்ள நிலையில் மாநில அரசுகளில் பணிபுரியும் அரசு ஊழியர் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அதனினும் குறைவான ஊதியம் நிர்ணயம் செய்திருப்பதை மாநில அரசுகளுக்கு, அரசு ஊழியர்கள் சுட்டிக்காட்டியும் அதை மாநில அரசுகள் மறுதலித்துள்ளன. இதுதான் இன்றைய மாநில அரசு ஊழியர்களின் நிலைமை. இவ்வளவு சவாலான சூழ்நிலைகளிலும் மாநில அரசு ஊழியர்கள் விதிகளுக்கு உட்பட்டு சிறந்த பணி செய்து வரும் நிலையில் மேற்கண்ட மாநிலங்கள் அவர்களுக்கு சம்பளக் குறைப்பு செய்துள்ளது நியாயமற்றது, அதர்மமானது. நேர்மைக்கு சவால் வரும் நேரங்களில் நெறிகள் மிகவும் முக்கியமானவை. மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநில அரசுகள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் நிதிப் பற்றாக்குறையை சரி செய்வதற்காக தமது மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஊதியத்தை/ ஓய்வூதியத்தை குறைத்திருப்பது நெறிபிறழ்ந்த செயலாகும்.

இச்சூழல் ஒரு அசாதாரண சூழல் என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவற்றை மாநில அரசுகள் எப்படி எதிர்கொள்கின்றன என்பதில்தான் மக்களுக்கும், மற்றவர்களுக்கும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை ஏற்படுவதும் இழப்பதும் நிகழ்கின்றன. நாடே பற்றி எரிந்த கொண்டிருக்கும் நேரத்தில் பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனெல்லாம் பரவாயில்லை என்று சொல்லுமளவுக்கு, வழக்கப்படி மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய நிதிகளைக்கூட அளிக்காமல் கை தட்டுங்கள், விளக்கேற்றுங்கள் என்று நடைமுறைக்கு உதவாத விஷயங்களில் கவனம் செலுத்தி வரும் பிரதமரை மாநில அரசுகள் எதிர்த்து கேள்விகள் கேட்டு நிதித் தொகைகளையும் நிவாரணத் தொகைகளையும் பெறுவதில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு, ஊருக்கு இளைத்தவன் அரசு ஊழியர்கள்தான்டி என்று பிள்ளையார் கோவில் ஆண்டியும் சொல்லும்வண்ணம் தங்கள் அரசு ஊழியர்களை மேலும் மேலும் வதைக்கும் மாநில அரசுகள் மேற்கொண்டுள்ள சம்பளக் குறைப்பு உத்தரவுகளை திரும்பப் பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

ஊழல் செய்து கோடிக்கணக்கில் வங்கிகளில் பணம் பதுக்கி வைத்திருக்கும் நபர்களின் பெயர்கள் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. அந்த கறுப்பு பண முதலைகளிடமிருந்து கடும் நடவடிக்கைமூலம் கறுப்புப் பணத்தை கைப்பற்றி கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு இப்போதாவது பயன்படுத்த வேண்டும் என்பது நடுநிலையாளர்களின் கேள்வியாகவும் ஆதங்கமாகவும் உள்ளது. ஆனால், நமது பிரதமர் என்ன செய்கிறார் என்றால் 'பாரதப் பிரதமர் தேசிய நிவாரண நிதி' என்ற பெயரில் இருக்கும் கணக்கை நிறுத்தி விட்டு பி.எம்.கேர்ஸ் (அதாவது பாரதப் பிரதமர் அக்கறை கொள்கிறார்) என்ற பெயரில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கென்று ஒரு கணக்கை அறிவித்து அதன் பெயரில் பிரதமரே நிதி பெற்று வருகிறார். இந்தக் கணக்கில் எவ்வளவு நிதி சேர்ந்துள்ளது என்பதை யாரும் கேட்கவும் முடியாது, அறியவும் முடியாது.

பிரதமர் பதவியின் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த கணக்கினை யார் ஏற்படுத்தியது? எந்த விதிகளின்கீழ் ஏற்படுத்தப்பட்டது? ஏதாவது அறக்கட்டளையின் கீழ் பதிவு செய்யப்பட்டதா?அதன் பதிவு எண் என்ன? இந்தக் கணக்கில் உள்ள நிதியை செலவிட யார் முடிவெடுப்பார்கள்? இந்தக் கணக்கிலிருந்து நிதி கேட்க மாநில அரசுகளுக்கு உரிமை உள்ளதா? போன்ற பல கேள்விகளுக்கு மத்திய அரசின் இணைய தளங்களில் எந்தவித பதிலும் இல்லை. பிரதமரோ, அமைச்சர்களோ இதற்கான விளக்கத்தை இதுவரை கொடுக்கவும் இல்லை என்பது மிகப்பெரிய சந்தேகங்களை எழுப்பியுள்ளது. எனவே பிரதமர் அவர்கள் பி.எம்.கேர்ஸ் கணக்கில் உள்ள தொகை எவ்வளவு என்பதை தெரிவித்து கடுமையான நிதி நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கும் மாநில அரசுகளுக்கு இதிலிருந்து நிவாரணத் தொகையை உடனடியாக விடுவிக்க முன்வர வேண்டும். பிரதமர் முதலில் பேச வேண்டியது விவசாயிகளிடமும், தொழிலாளர்களிடமும் தானே தவிர, விளையாட்டு வீரர்களிடம் அல்ல.

மத்திய அரசும், மாநில அரசுகளும் நினைத்தால் நிதி திரட்டிவிட முடியும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம்தான். நாடு சந்தித்து வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் வரி தள்ளுபடி செய்யப்பட்ட, கடன் தள்ளுபடி செய்யப்பட்ட பல நிறுவனங்கள் அதிக லாபம் ஈட்டும் நிறுவனங்கள் என அந்தந்த மாநிலங்களில் உள்ள நிறுவனங்களிடமிருந்து நிதிஉதவிகளைக் பெற்றேனும் இந்த கடுமையாக சூழ்நிலையை கடக்க மாநில அரசுகள் முன்வரவேண்டுமே ஒழிய, அரசு ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் போன்றோரிடமிருந்து சம்பளம்/ஓய்வூதியம் பிடித்தம் செய்து அதை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது என்பது அந்த மாநில அரசுகளின் நிர்வாகத் திறமையின்மையை வெளிப்படுத்தும்

நடவடிக்கைகளாகும். இருக்கும் இடத்தில் சுரண்டி எடுப்பதை விட்டுவிட்டு ஓட்டாண்டிகளிடம் மீண்டும் மீண்டும் சுரண்டுவதற்குப் பேர் மூளைத்தனமாகாது, முட்டாள்தனமேயாகும்.

மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும், எம்எல்ஏக்களும், எம்பிக்களும், முதலமைச்சர் மற்றும் பிரதம அமைச்சர் உள்ளிட்ட அனைத்துப் பெருமக்களும், தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதி முழுமையையும் கொரோனா கொடுந்தொற்று நிவாரணப் பணிக்கு ஒதுக்கீடு செய்தால் 15000 கோடி ரூபாய் எளிதில் திரட்டிட முடியும். இதுவன்றி மக்கள் பிரதிநிதிகளான எம்எல்ஏ., எம்பிக்கள் தங்கள் சொந்த சேமிப்பிலிருந்து தாராளமாக நிதிஉதவி செய்தால் மேலும் 5000 கோடி ரூபாய் தாராளமாக திரட்ட முடியும். இத்தகைய அசாதாரண சூழ்நிலையில் நிதி வழங்கி கொரோனா பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நல்லதொரு மருத்துவ சேவைகளையும் கொரோனா பாதித்த நபர்களுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர்கள், செவிலியர்கள், மருத்துவ தொழில்நுட்பப் பிரிவினர் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்களுக்கான பாதுகாப்பு உடைகளையும், உபகரணங்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்வதன் மூலம் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து இந்தியாவை சீக்கரமாகவே விடுவிக்கலாம் அல்லது 545 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 245 ராஜ்யசபா உறுப்பினர்கள், 4120 சட்டமன்ற உறுப்பினர்கள் என இந்தியாவில் மொத்தமுள்ள 4910 மக்கள் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் தாராள நிதியுதவி கொடுத்து உதவுவதன் வாயிலாக பல்லாயிரம் கோடி ரூபாய் நிதி திரட்டலாம். இந்தத் தொகை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு கணிசமான நிதி உதவியாக கட்டாயம் அமையும்.

ஒருவேளை மக்கள் பிரதிநிதிகள் தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தர முன்வராவிட்டாலோ அல்லது தலா ஐந்து லட்ச ரூபாயை நிதியாக அளிக்க முன்வராவிட்டாலோகூட இன்னொரு வழி இருக்கிறது. அது பிரதமர் 2014ஆம் ஆண்டு தேர்தலின்போது சொன்னாரே, தான் ஆட்சிக்கு வந்தால் 100 நாட்களில் அந்நிய நாட்டு வங்கிகளில் ஊழல் பேர்வழிகள் பதுக்கி வைத்திருக்கும் பல்லாயிரக்கணக்கான கோடி பணத்தை மீட்டு எடுத்து வந்து இந்திய மக்கள் ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் போடுவதாக. அந்தப் பணத்தை இப்போதாவது - மக்களுக்குத் தர வேண்டாம். கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக யாரிடமும் கையேந்தாமல் உபயோகப்படுத்த வேண்டும்.

ஊழல் பேர்வழிகளை அடையாளம் காட்ட மாட்டார்கள், அவர்களிடமிருந்து ஊழல் பணத்தை மீட்கவும் மாட்டார்கள், பெரிய நிறுவனங்களிலிருந்து நிதியும் கோர மாட்டார்கள். அப்படியே நிதி கோரிப் பெற்றாலும் அதை எவ்வளவு என்றும் கூற மாட்டார்கள். மக்களவைத் தொகுதி உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக கொடுக்கவும் மாட்டார்கள், தங்கள் பணத்திலிருந்தும் கொடுக்க முன்வர மாட்டார்கள். ஆனால் அரசாங்கத்தை எதுவும் எதிர்த்துக் கேட்க முடியாத அரசு ஊழியர்களின் சம்பளத்திலிருந்து மட்டும் அல்வாத் துண்டுபோல 30 சதவீதம், 50 சதவீதம், 60 சதவீதம் 75 சதவீதம் என வெட்டி எடுத்துக்கொள்வார்கள். ஆட்சியாளர்களே ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள், கடுமையான நேரங்களில் மட்டும் நீங்கள் நடுநிலையாளர்களைப் போல் காட்டிக்கொள்வதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. அப்படி செய்வீர்களேயானால் உங்களுக்கான குழிகளை நீங்களே தோண்டிக் கொள்வதை யாராலும் தடுக்க முடியாது.

அரசு ஊழியர்களே ஆசிரியர்களே! ஓய்வூதியதாரர்களே! இது நமது அண்டைவீட்டுக்காரர்கள் பிரச்னை, நமக்கில்லை என்று இருந்து விடாதீர்கள். இதன் தொடர்ச்சியில் நாமும் இருக்கலாம். கொரோவைப் போல்தான் இதுவும். கடமையைத் தொடரும் உணர்வு நம் அனைவரிடமும் உள்ளது. நாம் எப்போதும் உழைக்கத் தயாராகவே இருக்கிறோம். உண்மையாக உழைப்பதும், நேர்மையாக நடப்பதும் மட்டுமல்ல நம் அனைவரின் கடமை. நியாயங்கள் தோற்றுப்போகாமல் காக்க வேண்டியதும் நம் கடமையாகும். அந்தக் கடமை நம்மை அழைப்பதை நாம் உணர வேண்டும்.

மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஆந்திரா, தெலுங்கானா மாநில முதல்வர்களே! உங்கள் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சம்பளம்/ஓய்வூதியத்தில் இருந்து பிடித்தம் செய்திருக்கும் தொகையில் ஒரு பைசாகூட விடாமல் அவர்களுக்கு வழங்கிட உடனடியாக உத்தரவிடுங்கள். நோயைப் போக்காத, வெறும் பக்கவிளைவுகளை மட்டுமே கொண்ட அரசாணைகளையும், உத்தரவுகளையும் உடனடியாக ரத்து செய்யுங்கள். கடைசியாகத் தேர்ந்தெடுக்க வேண்டியவைகளை முதலிலேயே தேர்ந்தெடுப்பதன் பெயர் ராஜதந்திரம் அல்ல, கையாலாகத்தனம். உங்கள் அரசு ஊழியர்கள் உங்கள் அரசாங்கத்தை வழிநடத்தும் சேனைகள். அவர்களை அவமானப்படுத்தி உங்கள் முகத்தின் மீது நீங்களே கரியை பூசிக் கொள்ளாதீர்கள். நிதியை திரட்ட ஆயிரம் வழிகளை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். ஆனால் நீதியையும் நியாயத்தையும் திரட்ட அரசு ஊழியர்கள் என்ற நம்பிக்கையான சேவகர்களை விட்டால் உங்களுக்கு வேறு யார் இருக்கப் போகிறார்கள்? என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது. ❖

# கொரோனா: சீனா மீது அமெரிக்கா விஷமப் பிரச்சாரம்

சீனாவின் இரகசிய ஆயுத ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து உயிரியல் போர் ஆயுதமாக தயாரிக்கப்பட்ட கிருமி தவறுதலாக வெளியேறி பரவியதுதான் கொரோனா வைரஸ் என்றும், சீனாவை சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்த வேண்டும் என்றும் கடந்த இரண்டு மாதங்களாக அமெரிக்கா இடைவிடாத அவதூறு பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கின்றன. புரளிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது சமீபத்திய ஆய்வு. அமெரிக்காவின் ஸ்க்ரிப்ஸ் இன்ஸ்டிட்யூட் என்ற நிறுவனத்தை (Scripps Research Institute) சேர்ந்த கிறிஸ்டியன் ஆண்டாசன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவானது புகழ் பெற்ற நேச்சர் மெடிஸன் ஆய்விதழிதல் மார்ச் 17, 2020 செவ்வாயன்று வெளியாகியுள்ளது.

SARS –Cov-2 என்ற அறிவியல் பெயரைக் கொண்ட இந்த வைரஸின் மரபணுக்கள் ஆய்வு செய்த நிபுணர்கள் இவை ஆய்வகத்தில் செயற்கையாகவோ அல்லது மரபணுமாற்றம் செய்யப்பட்டோ உருவாகவில்லை என்றும் இயற்கையில் பரிணமித்த புதிய இனப்பிரிவு என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வுஹான் நகரில் வைரஸ் ஆய்வு நிறுவனம் உள்ளதால் கொரோனா வைரஸ் அங்கே ரகசியமான தயாரிக்கப்பட்ட செயற்கை கிருமி என்ற புரளி எழுந்தது. ஏற்கனவே நாம் அறிந்துள்ள வேறு கொரோனா வைரஸ் இனப்பிரிவுகளின் மரபணு தொடரோடு புதிய இனப்பிரிவை ஒப்பிட்டு பார்க்கும் போது SARS –Cov-2 இனப்பிரிவு வைரஸ் இயற்கையில் பரிணமித்த ஒன்று என தெள்ளத்தெளிவாக புலப்படுகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

### மரபணு

தொற்று நோய் பரவல் ஏற்பட்ட சில நாட்களிலேயே சீன விஞ்ஞானிகள் SARS –Cov-2 வைரஸீன் மரபணு தொடரை வரிசை செய்து அனைத்து ஆய்வாளர்களும் ஆராய்ச்சி செய்யும் வண்ணம் பொது வெளியில் வெளியிட்டனர். ஏற்கனவே நடத்தப்பட்ட ஆய்வில் முதலில் ஒரே ஒரு மனிதருக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்ட அதன் பின்னர் அவரிடம் இருந்து மற்றவர்களுக்கு பரவித்தான் சீனாவில் தொற்று நோய் பரவல் ஏற்பட்டது என்பது விளங்கியது.

ஏறக்குறைய பந்து வடிவில் இருக்கும் கொரொனோ வைரஸ்கள் மீது குறிப்பிட்ட புரதங்களால் ஆன கூர் முனையில் உள்ளன. இந்த கூர் முனைகளை கொண்டு விலங்குகள் மற்றும் மனித செல்களை இந்த வைரஸ் பற்றிக்கொண்டு துளையிட்டு உள்ளே நுழைகிறது.

### உருவான காரணிகள்

இரண்டு வகையில் இந்த நோவல் SARS –Cov-2 வைரஸ் பரிணமித்து இருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். முதலாவதாக வேறு விளங்குகளில் தொற்று ஏற்படுத்தும் வைரஸ் உருவாகி பின்னர் மனிதர்களிடம் நோய் ஏற்படுத்தும் கிருமியாக பரிணமித்து பரவியிருக்கக்கூடும். இல்லையெனில் முதலில் நோய்யுற்ற வடிவில் மனிதரிடம் பரவி பின்னர் மனிதரிடம் பரிணமித்து நோய் ஏற்படுத்தும் கிருமியாக உருவாகியிருக்கலாம்.

இரண்டில் எது சரி என்பதை இப்போது நம்மிடம் உள்ள தரவுகளை கொண்டு இறுதி செய்ய முடியாது. தொற்று விளைவிக்கக்கூடிய திறனோடு விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவியது என்றால் மறுபடி இந்த வைரஸின் வேறு ஒரு வடிவம் எதிர்காலத்தில் பரவி புதிய தொற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

நோய் ஏற்படுத்தும் திறனற்ற வடிவில் மனிதர்களிடம் பரவி பின்னர் நோய் தன்மை கொண்ட வைரஸ் பரிணமித்துள்ளது என்றால் மறுபடியும் அதே போன்ற நிகழ்வு ஏற்படும் வாய்ப்பு மிகக்குறைவு எப்படி இந்த வைரஸ் உருவானது என்பதை கூடுதல் ஆய்வுதான் நமக்கு தெளிவு படுத்தும்.

இந்நிலையிலும் கொரோனா வைரஸ் பாதிப்பை சந்தித்த சீனா, தனது ஒட்டு மொத்த மக்களையும் பாதுகாப்பதற்காக இரண்டு மாத காலம் ஒரு நொடியை கூட வீணாக்காமல் ராக்கெட் வேகத்தில் செயல்பட்டது. சீனாவின் நோய் தடுப்பு நடவடிக்கைகளும் கொரோனா வைரஸ் மேலும் பரவாமல் தடுத்து நிறுத்திய மகத்தான சாதனையும் நாம் வாழும் காலத்தில் ஒரு சோசலிச அரசு மட்டுமே தனது மக்களை எப்பாடுபட்டாவது பாதுகாக்கும் என்பதை நிரூபித்துள்ளது சீனா.

- மு.பாஸ்கரன்



# பாட்டுக்கோட்டையாய் பட்டுக்கோட்டை

**த**ஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகில் உள்ள செங்கப்படுத்தான்காடு என்ற கிராமத்தில் பூத்த செம்மலர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

தனது இளமைக் காலத்திலேயே பலரும், கேட்டுக் கிறுகிறுக்கும்படி பாட்டுக்கட்டிப் பாடுவார். தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு உண்ண உணவு கொண்டு போய்க் கொடுப்பார்; ரகசியக் கடிதங்களை உரியவர்களிடம் சேர்ப்பார்; இயக்கப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வார்.

திண்டுக்கல்லில் 1.8.1954ல் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாடு நடந்தது. அதில் அரங்கேறிய ‘கண்ணின் மணிகள்’ என்ற நாடகத்திற்கு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள் எழுதினார். நாடகத்திற்கு தலைமை தாங்கிய தலைவர் ப.ஜீவானந்தம், நாடகத்தில் இடம் பெற்றிருந்த பாடல்களை வெகுவாகப் பாராட்டினார்! “மக்கள் கவிஞருக்குரிய தரஉயர்வு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்களில் ஒளி விடுகின்றன!” என்று உயர்த்திப் பேசினார்!

பாண்டிச்சேரி பொதுவுடமைத் தலைவர் வ.சுப்பையா மூலம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை நேரில் சந்தித்தார். உணர்ச்சிப் பெருக்கோடு கல்யாண சுந்தரத்தைத் தழுவி அணைத்துக் கொண்டார் பாவேந்தர். “நான் எழுதும் பாடல்களைப் படி எடுப்பதும், குயில் ஏட்டைப் பார்த்துக் கொள்வதும் உனது பணிகள்! சம்மதம் தானே!” என்றார். அதனைப் பெறற்கரிய பெரும் பேறாகக் கருதினார் கல்யாணசுந்தரம். பகலில் இல்லத்தில் பணி, இரவில் கட்சி அலுவலகத்தில் கண்ணயர்வு! கவிதையும்கட்சிப் பணியும் அவருக்கு இரு கண்களாயின.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் 1955ஆம் ஆண்டு தயாரித்த மகேஸ்வரி என்ற திரைப்படத்தில் கல்யாண சுந்தரத்தின் பாடல்கள் முதன் முதலாக இடம் பெற்றன.

“பாசவலை” என்ற திரைப்படத்திற்கு இவர் எழுதிய பாடல்கள் திரை உலகில் புகழைப் பெற்றுத் தந்தது.

குல தெய்வம், ரங்கோன் ராதா, சக்கரவர்த்தி திருமகள், அலாவுதீனும் அற்புத விளக்கும், புதையல், நாடோடி மன்னன், உத்தமபுத்திரன், அன்பு எங்கே, திருமணம், பதிபக்தி, தங்கப் பதுமை, கல்யாணப்பரிசு, நல்ல தீர்ப்பு உட்பட 57 திரைப்படங்களுக்கு 182 திரை இசைப் பாடல்களை எழுதியுள்ளார் கல்யாண சுந்தரம்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் தலைமையில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திற்கும் கௌரவாம்பாளுக்கும் திருமணம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் பொதுவுடைமைச் சிந்தனைகளையும், சமூக மாற்றத்திற்கான கருத்துக்களையும், தனது பாடல்களில், பொதிந்து வைத்து கவித்துவத்தோடு வெளிப்படுத்தியுள்ளார். அவர் பாடல்கள் நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவற்றின் எளிமையும், இனிமையும், கருத்தும் செறிவும் ஆகும்.

விவசாயிகளின் வாழ்க்கையை நாடோடி மன்னன் திரைப்படத்தில்,

“காடு வெளஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலும் தானே மிச்சம்”

என்ற பாடல் மூலம் வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்.

உழைப்பின் மேன்மையை திருடாதே திரைப்படத்தில்

“உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டா
கெடுக்கிற நோக்கம் வளராது - மனம்
கீழும் மேலும் புரளாது”

என்ற பாடல்கள் மூலம் உணர்த்துகிறார்.

மூட நம்பிக்கைகளை தங்கப் பதுமை திரைப்படத்தில் அம்பலப்படுத்தியுள்ளார்.

“செம்பும் கல்லும் தெய்வமென்று
நம்புவோர்கள் பித்தரென்று
சித்தர்கள் உரைத்த மொழி மெய்தானே?
சிற்பிகள் செதுக்கி வைத்த

சித்திரச் சிலைகளுக்குள்
தேவி வந்திருப்பதுவும் பொய்தானே?"

மேலும், அரசிளங்குமரி திரைப்படத்தில் வரும் கீழ்க் குறித்த பாடல் வரிகள் பாரதியின் நெஞ்சு பொறுக்குதில்லையேவை நினைவூட்டும்.

"வேப்பமர உச்சியில் நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லிவைப்பாங்க - உன்
வீரத்தைக் கொளுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க...'

விதியை நம்பி வெம்பி வாழ்பவர்களைப் பார்த்து, உழைப்பின் மேன்மையை இவ்வாறு கூறுகிறார்.

"விதியின் உணர்வால் வீழ்ந்து
கிடக்கும் வீணரெல்லாம் வேலை
செய்து வீறுபெற வேண்டும்
தூங்காதே தம்பி தூங்காதே! நீயும்
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!"

என்ற பாடல் வரிகள் மூலம் சோம்பித் திரியேல் என்பதை விரிவாகக் கூறுவதுடன் சோம்பலால் கல்வி, முதல், புகழ், வேலை என வாழ்வின் அனைத்தையும் இழக்க வேண்டிவரும் என்பதை அறிவுறுத்துகிறார்.

நாட்டில் தனிவுடமைக் கொடுமைகள் ஒழிந்து பொதுவுடமை மலர்ந்திடப் போராட வேண்டும் என்ற கருத்தை இப்படிப் பாடிக்காட்டுகிறார்!.

"தனிவுடமைக் கொடுமைகள் தீரத்
தொண்டு செய்யடா! நீ
தொண்டு செய்யடா!
தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா! - எல்லாம்
பழைய பொய்யடா!"

பெண்ணடிமைத் தனத்தை புதுமைப் பெண் என்ற திரைப்படத்தில் இப்படிச் சாடுகிறார்

"தன் கணவனை இழந்தவள் கட்டழகியானாலும்
கடைசியில் சாகமட்டும் உரிமையுண்டு இதில்
கதைகளும் கட்டிவிடும் ஊர் திரண்டு!"

கைம்பெண்களின் நிலைமையினையும், சமூகம் கொண்டுள்ள மோசமான பார்வையையும் இங்கு அம்பலப்படுத்துகிறார்.

சோதிடம், கைரேகைப் பார்த்தல் ஆகிய மூட நம்பிக்கைகளை கீழ்க்கண்டவரிகள் மூலம் சாடுகிறார்.

"தன் ரேகை தெரியாத பொய்ரேகை காரரிடம்
கைரேகை பார்க்க வரும் முறையாலும் அவன்
கண்டது போல் சொல்லுவதை ஆறறிவில்
நம்பிவிடும் வகையிலும் ஓரறிவு அவுட்டு
அறிவுக் கதவை சரியாய் திறந்தால்
பிறவிக் குருடனும் கண் பெறுவான்."

தொழிற்சாலை கதவடைப்பைக் கண்டித்து இரும்புத்திரை படத்தில் இவ்வாறு எழுதினார்.

"பட்டினிக்கும் அஞ்சிடோம்!
நெஞ்சினைப் பிளந்த போதும்
நீதி கேட்க அஞ்சிடோம்!
நேர்மையற்ற பேர்களின்
கால்களை வணங்கிடோம்!."

அரசியல்வாதிகளின் போலி வாக்குறுதிகளையும், மக்களின் வறுமையையும்,

"தேனாறு பாயுது! செங்கதிர் சாயுது!
ஆனாலும் மக்கள் வயிறு காயுது"

என்ற பாடல் வரிகள் மூலம் காட்சியாக்குகிறார்.

குறுகிய காலமே வாழ்ந்தாலும் தன் கவிதை வாளால், திரை உலகை ஆண்ட முடி சூடாமன்னன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். மக்களுக்காகச் சிந்தித்த மகத்தான அக்கவிஞன், தமது 29 வயதிலேயே காலமானார். ஆனாலும் பட்டிதொட்டி முதல் பட்டணக்கரை வரை இப்பாருலகு எங்கும், அவரது பாடல் வரிகள் மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்பவை......! என்றும் சாகாதவை.

அவரது படைப்புகள் யாவும் அவரைப் போலவே எளிமையானவை. இனிமையானவை. திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதினாலும் இறுதி வரை

சோரம் போகாத கவிஞராகத் திகழ்ந்தார். எம்.ஜி.ஆர். முதலவர் ஆனதும் தமது நாற்காலியின் ஒரு கால் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் கால் என்றாராம். அந்தளவிற்கு பொதுவுடமைத் தத்துவப் பாடல்கள் எம்.ஜி.ஆர் நடித்த படங்களில் இடம் பெற்றதற்கு கவிஞரே காரணம்.

"கலை மக்களுக்குச் சொந்தமானது. அதன் வேர் வஞ்சிக்கப்பட்ட பெரும்பாலான உழைப்பாளி மக்களுக்கு இடையில் படர்ந்திருக்க வேண்டும். அது அவர்களை ஒன்றுபடுத்தி அவர் தம் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் நிறைவேறச் செய்வதாய், அவர் தம் கலையுணர்வைத் தூண்டுவதாய் அமைதல் வேண்டும்" என்ற லெனின் கூற்றுக்கு இலக்கணமாக படைப்புகளை வழங்கியவர் பட்டுக்கோட்டையார்.

பாட்டுக்கோட்டையாய்த் திகழ்ந்த கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் புகழ் நிலையானது.

(பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்தநாள் ஏப்ரல் 13)

**- பெரணமல்லூர் சேகரன்**

# துறைவாரி சங்க நிகழ்வு

தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில், கல்வித்துறையில் ஒழிக்கப்பட்டுள்ள அடிப்படைப் பணியாளர் பணியிடங்களை உடனடியாக திரும்ப வழங்கி நிரப்பிட வேண்டும், கல்வித்துறையில் பணிபுரிந்துவரும் அமைச்சுப் பணியாளர்களுக்கு விலையில்லா மாறுதல் கலந்தாய்வு ஆண்டு



தோறும் நடத்துதல், கல்வித்துறையில் நேரடி நியமன உதவியாளர் நியமனங்களை கைவிடுதல், தகுதிகாண்பருவம் முடித்தலுக்கான கருத்துருக் கள் நீண்ட வருடமாக நிலுவையில் உள்ளதை சரிசெய்து விரைந்து தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கக் கோருதல் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி 09.03.2020 அன்று மாலை கரூர், முதன்மைக் கல்வி அலுவலகம் முன்பாக பெருந்திரள் முறையீடு போராட்டம் நடைபெற்றது. இதற்கு மாவட்டத் தலைவர் க.பாண்டிக்கண்ணன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் வ.கோபி வரவேற்புரையாற்றினார். மாநில பொதுச் செயலாளர் பொன்.ஜெயராம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல், தமிழ்நாடு ஆய்வுக நுட்புனர் சங்க மாநிலச் செயலாளர் மு.செல்வராணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக மாவட்டப் பொருளாளர் வ.ஸ்டாலின் நன்றி கூறினார். முடிவில் கோரிக்கை மனுவினை மாவட்ட நிர்வாகிகள் கரூர், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளரிடம் சமர்ப்பித்தனர். ❖


## அரசு ஊழியர் இதழ் பற்றிய அறிக்கை
## நமுனா (18ஆம்) பாடப் பிரிவு

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | சென்னை-5 |
| வெளியிடும் காலம் | : | மாத இதழ் |
| அச்சிடுபவர் | : | மு.அன்பரசு |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ் எண். 19/1 ~ 21/2 கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை - 600 002 |
| வெளியிடுபவர் | : | மு.அன்பரசு |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஆசிரியர் | : | ஆ.செல்வம் |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |

ஒரு சதவீதத்துக்கு மேல் பங்குத்தொகை அளித்துள்ளவர்கள் — தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005

மு.அன்பரசு என்னும் நான் மேலே கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை உண்மையென்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

சென்னை
1.4.2020

மு.அன்பரசு
வெளியிடுபவர்



Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com


கும்பலில் செல்வதை தவிர்ப்போம்!


பாதுகாப்பு கவசங்களை
முறையாக அணிவோம்!



தொட்டுப் பேசுவதை
தவிர்ப்போம்!



தொடாமல்
நட்பு பாராட்டுவோம்!


COVID
நம் பாதுகாப்பு
உலகின் பாதுகாப்பு!


RESERVE BANK OF INDIA
₹2000
விலகியிரு!
வீட்டிலிரு!
விழிப்போடிரு!

Registered Postal Registration No.TN/CH/(C)/200/2018-2020 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431-2020 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirka Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.04.2020






Registered Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai,Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com